# அர்ச்சுனா

கல்வி — முயற்சி — பெருவாழ்வு

SITHY VINAYAGAR LIBRARY
EAR... AI WEST
...AKAM







பாசறைத் தீ

உள்ளே

சுவாலையில் வாடும் சிறுவர்




வடக்கின் மிகப் பிரபல்யமான

# பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு

## கிரிக்கெட் அபிமானிகளே!

ஒவ்வொரு வாரமும் முன்னணியில் இருக்கும் வீரருக்கு அந்த வாரத்தில் வாக்களித்த இரு அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப் படும் ரூபா 50/- பரிசுக்கு மேலதிகமாக வாரந்தோறும் வாக் களிப்பில் கலந்து கொள்ளும் வேறு இருவருக்கும் பெறுமதி மிக்க அதிர்ஷ்டப் பரிசுகள் காத்திருக்கின்றன.

இத்துடன் உள்ள கூப்பனை உடன் நிரப்பி அனுப்புங்கள். விபரங்களுக்கு உதயன் பத்திரிகையைப் பாருங்கள்.



நவநாகரிக

⁂ ஆடவர்கள்
⁂ மங்கையர்கள்
⁂ இளைஞர்கள்
⁂ சிறுவர்கள்

எல்லோருக்கும் ஏற்ற ஆடைவகைகளின் விற்பனையாளர்கள்
கல்யாணக் கூறைகள், பட்டுவேட்டி சால்வைகள்
மற்றும்
★ சூட்டிங் ★ சேட்டிங்
வகைகளுக்கு நாடவேண்டிய இடம்

இளவரசி

S 12, நவீன சந்தை, சுன்னாகம்.
Dealers in TEXTILES and FANCY GOODS

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன்
කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ කෙරේ
READING MAKES A MAN PERFECT

By Courtesy: MILK WHITE SOAP WORKS, Jaffna (SRI LANKA)

''நல்லன கற்று'' நன்மக்கள் ஆக
நல்ல பல நூல்கள், படிக்க வேண்டும்.
10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் அல்லது
2 சுப்ப மில்க்வைற் சோப்
மேலுறைகளை அனுப்பி பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

⁂ மில்க்வைற் செய்தி ⁂ ஆத்திசூடி ⁂ நல்வழி
⁂ கொன்றை வேந்தன் ⁂ உலகநீதி

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# அர்ச்சுனா

**கல்வி-முயற்சி-பெருவாழ்வு**

நீதி, உயர்ந்தமதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்
— பாரதி

தனு: 1 கணை: 3

விலை ரூபா: 3-00

அர்ச்சுனா
மார்ச் - 1987


## உங்களோடு ஒரு கணம்

அன்பார்ந்த இளவல்களே!

இளமையிற் கல்வி சிலையில் எழுத்துப் போன்றது. ஒழுக்கம், நற்பண்பு, மனித நேயம், தொண்டு செய்தல் ஆகியவையும் கல்விக்கு நிகரானவை. அவற்றையும் இளம் பராயத்திலேயே பயின்று கொள்ளுதல் நன்று.

நீங்கள் பெரியவர்களாக வளர்ந்ததும், இளமையிற் பெற்ற கல்வியும், பண்புகளும், குணங்களும்தான் உங்களை நற்பிரசைகள் ஆக்குகின்றன.

நற்பிரசைகளாக நீங்கள் வளர்வதற்கு இளமையிலேயே பயிற்சி தரவல்லது சாரணீயம். ஆகையால் உங்களில் ஒவ்வொருவரும் தவறாது சாரணர்களாகச் சேர்வது இன்றியமையாதது.

உடல், உள்ளம் ஆன்மீகம், ஆகிய முத்துறைகளிலும் உங்களுக்கு உயரிய பயிற்சிகளைத் தருவதும் சாரணீயமே.

இளைஞர்களாகிய உங்களின் ஆற்றல், திறமை, துணிச்சல் என்பவற்றை வளர்ப்பதற்கும் சாரணீயம் பெரிதும் உதவும்.

உலகின் பல நாடுகளிலும் உள்ள மாணவர்கள் சாரணர்களாக விளங்குகிறார்கள். அவர்களைப் போன்று நீங்களும் சாரணர்களாவது பல வகைகளிலும் நற்பயன் தரும்.

சாரணர்களாகச் சேர்ந்துவிட்டால் மட்டும் போதுமா? இல்லை.

அடுத்தவருக்குச் சேவை செய்யும், நல்லொழுக்கம் உள்ள, சீரிய பண்புகளையுடைய மனித நேயம் கொண்ட, தியாகம் செய்வதற்குப் பின்னிற்காத, துணிச்சல்மிக்க ஒரு நற்பிரசையாக வாழ்க்கையில் — நடைமுறையில் வாழ்ந்து காட்ட இப்போதே திடசங்கற்பம் செய்து கொள்ளுங்கள், பயிற்சி பெறுங்கள்.

சாரணீயத்தின் சிறப்பையும், மகத்துவத்தையும் உணர்த்தும் விதத்திலேயே இம்மாத முகப்பு அட்டையில், சாரணர் பாசறைத் தீயையும் இவ்வருட மத்தியில் நடக்கும் உலக ஜம்போரியில் பங்குபற்றும் இரு தமிழ் மாணவர்களையும் சேர்த்துள்ளோம்.

வணக்கம்,

-- மயில்மாமா

# துணுக்குக் குவியல்

ஹேலீஸ் வால் நட்சத்தி ரத்துக்குப் போட்டியாக இன்னெரு வால் நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியோ தொழில்நுட்ப நிலேயத்தைச் சேர்ந்த கிறிஸ்டின் வில்ஸன் இந்த வால் நட்சத்திரத்தைக் கண்டுபிடித்தார்.

அடுத்த வசந்த காலத்தில் தென் கோளத்தில் இருந்து வெறும் கண்களினுல் இந்த வால் நட்சத்திரத்தைப் பார்க்கக் கூடியதாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது பூமியில் இருந்து 9 கோடி கிலோ மீட்டர் தூரத்தில் இந்த வால் நட்சத்திரம் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

சூரியனில் இருந்து 51 கோடி 20 லட்சம் கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த பொழுது கிறிஸ்டின் வில்ஸன் இந்த வால் நட்சத்திரத்தைக் கண்டுபிடித்தார்.

நீண்ட வாலுடனுன இந்த நட்சத்திரத்துக்கு கண்டுபிடித்தவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 20, 21 ஆம் திகதிகளில் இது சூரியனுக்கு அருகே 16 கோடி கிலோமீட்டர் தூரத்தில் காணப்படும். பின்னர் சூரிய வட்டத்தினுள் சென்றுவிடும்.

* * *

குடல் புண் நோய்க்கு தேநீருடன் கலந்து குடிக்கும் புதிய மருந்து ஒன்றை ரஷ்ய விஞ்ஞானிகள் தயாரித்துக் கொண்டு இருக்கிறுர்கள்.

சைபீரியாவில் உள்ள ரஷ்ய அக்கடமியைச் சேர்ந்த விஞ்ஞானிகளே இதில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய மருந்தைத் தேநீருடன் கலந்து குடித்தால் குடல் புண்ணுடன், உடலுறுப்புக்களும் நோயை எதிர்த்து நிற்கும் சக்தியையும் பெறுமாம்.

பண்டைய காலத் தீபெத்திய ஆராய்ச்சிப் புத்தகங்களில் கூறப்பட்டுள்ள முறைகளின்படி புதிய மருந்து தயாரிக்கும் வேலை நடைபெறுகின்றது.

* * *

நிலக்கரித் தூசில் இருந்து உறுதியான செங்கற்கள் தயாரிக்கப்படுகின்றன.

இங்கு அல்ல. ரஷ்யாவில் உள்ள ஜீவ் என்ற இடத்தில் இது நடக்கின்றது.

* * *

பண்டைக் காலத்தில் செங்கற்களைச் சேகரித்து வைக்கும் தொல்பொருள் காட்சிச் சாலை ஒன்று அமெரிக்காவில் ரென்னஸி மாநிலத்தில் உள்ளது.

ஜோன்ஸ்டன் நகரில் வசிக்கும் பேசில் சேபர் இதனை அமைத்திருக்கிறுர்.

**தீபன்ராஜா**

பழங்கால செங்கற்களைச் சேகரிப்பதற்காக உலகம் முழுவதும் இவர் பயணம் செய்துள்ளார்.

ஒன்றரை லட்சம் கிலோ மைல்களுக்கு அதிகமாக பயணம் செய்து 60 நாடுகளில் இருந்து பழங்காலச் செங்கற்களைச் சேகரித்தார் இவர்.

லண்டனுக்கு அருகில் உள்ள ரோமர் காலத்துக் கோட்டையின் செங்கல், சீனப் பெருஞ்சுவரில் எடுக்கப்பட்ட செங்கல் இவரின் தொல்பொருள் காட்சிச்சாலையில் உள்ளன.

அமெரிக்காவில் முதல் குடியேறியவர்களை ஏற்றிவந்த கப்பல் 'மேபிளவர்' என்பது. அந்தக் கப்பலில் சுமைக்கு வைக்கப்பட்டிருந்த செங்கற்களில் ஒன்றும் இந்த மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

* * *

சோவியத் ரஷ்யாவின் மூன்ருவது சனத்தொகைக் கணக்கெடுப்பு எப்போது நடைபெறவுள்ளது?

1989 ஜனவரியில் என்று ரஷ்யாவின் புள்ளி விவரக் கணக்கெடுப்புப் பிரிவுத் தலைவர் துக்கெய்ல் கொரோலிங் தெரிவித்திருக்கிறுர்.

இரண்டாவது கணக்கெடுப்பு ரஷ்யாவில் 60 ஆண்டுகளுக்கு முன்னர் (17-12-1926) நடைபெற்றது.

அப்போது நாட்டின் சனத்தொகை 14 கோடி 70 லட்சமாக இருந்தது. 28 கோடியாவது குழந்தை ரஷ்யாவில் கடந்தவருட நடுப்பகுதியில் பிறந்தது.

இப்போது சனத்தொகை 28 கோடியாக உயர்ந்துள்ளது.

குழந்தைகள் பிறப்பு பதியப்படுவதை வைத்தே இக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது.

நாடு முழுவதும் ஒரே நாளில் சனத்தொகைக் கணக்கெடுப்பு மூன்ருவது முறையாக 1989 ஜனவரியில்தான் நடைபெற உள்ளது.

இச்சனத்தொகைக் கணக்கெடுப்பில் இம்முறை புதிதாக இரண்டு கேள்விகள் கேட்கப்படவுள்ளன.

ஒன்று' தொழிற்கல்விப் பாடசாலைப் பயிற்சி உண்டா?

இரண்டு, எப்படி வருமானம் கிடைக்கிறது.

# அறிவுலக அறிமுகம்

கலாநிதி சபா ஜெயராசா

அங்கம்: 3

## புத்தகத்தின் கதை

கோகுலன் மிகவும் கெட்டிக்காரன். அவனிடம் பல புத்தகங்கள் இருந்தன. அவற்றை அவன் நன்ருக வாசிப்பான். படித்துப் படித்துச் சுவைப்பான். புத்தகம் சேகரித்தல் அவனது இனிமையான பொழுதுபோக்கு. புத்தகங்களைப் பார்க்கும்பொழுது அவன் மகிழ்ச்சியாற் பாடுவான்.

வான வில்லைப் போலே
வண்ண வண்ணப் புத்தகம்
பார்க்கும்போது ஆசை
படிக்கும்போது மகிழ்ச்சி.

அப்போது கணீரென்ற குரல் கேட்டது. அவனது மேசையிலிருந்த புத்தகம் பேசத் தொடங்கியது.

''எனது கதை தெரியுமா?'' என்றது. ''புத்தகங்களை நூல்கள் என்றும் கூறுவார்கள். பஞ்சிலிருந்து மிக நுட்பமாகவே பருத்தி நூல் தயாரிக்கப்படுகின்றது. அவ்வாறு சொற்களிலிருந்தும் நுட்பமாக நூலாக்கப்படுகின்றது.

ஆரம்பத்திலே புத்தகம் எவ்வாறு தயாரிக்கப்பட்டதென்பது மிகவும் சுவையான கதை. பாபிலோனியாவிலும் சீனுவிலும் களிமண் பலகைகளிலே புத்தகங்களைத் தயாரித்தார்கள். கிறிஸ்துவுக்கு முன் 2000 ஆண்டைச் சேர்ந்த 20,000 களிமண் பலகை எழுத்தாக்கங்கள் பபிலோனியாவிலே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மனிதருடைய அறிவு வளர்ந்தது. அறிவுத் துறைகள் அனைத்தையும் நினைவில் வைத்திருத்தல் கடினமாக இருந்தது. ஆகவே மேலும் புத்தகங்களை எழுதி வைக்க வேண்டிய தேவை எழுந்தது.

எகிப்து நாட்டில் ''நைல்'' எனப்படும் நதி பாய்கின்றது. அதன் கழிமுகத்திலே ''பைபிரஸ்'' என்னும் நாணற்புல் வளருகின்றது. பழங் காலத்திலே அந்தப் புல்லின் தாளிலிருந்து புத்தகங்களை ஆக்கினுர்கள். தாள்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டன. இணைக்கப்பட்ட தாள்கள் சுருளாக்கப்பட்டன. புத்தகங்கள் சுருள்களாக இருந்தன.

தமிழர்கள் பனை ஓலையை எழுதுவதற்குப் பயன்படுத்தினுர்கள். பனை ஓலைச் சுவடிகள் ஒன்றிணைக்கப்பட்டன. அவை நூல்களாக மலர்ந்தன. தஞ்சையிலே ''சரஸ்வதி மகால்'' என்ற ஒரு நூலகம் உண்டு. அங்கே பெருமளவு பனை ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டன.

புத்தகங்கள் நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டும் என்ற ஆசை மனிதருக்கு எழுந்தது. அதன் காரணமாகச் செப்புத் தகடுகளைச் செய்தார்கள். அவற்றைப் புத்தகமாக்கினுர்கள்.

அச்சு யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. புத்தகங்கள் புதிய வடிவைப் பெற்றன. புத்தகங்களைப் பெருந் தொகையாகத் தயாரிக்க முடிந்தது. ஓலைச் சுவடிகளாக இருந்த நூல்களை அச்சு வடிவப் புத்தகமாக்கும் முயற்சிகள் வளர்ந்தன. ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை முதலியோர் அந்தப் பணியைச் செய்து காட்டினார்கள்.

புத்தகங்கள் வாயிலாக அறிவு பாதுகாத்து வைக்கப்படுகிறது. அனுபவங்கள் எழுதி வைக்கப்படுகின்றன. நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆகவே, நல்ல புத்தகத்தை நல்ல நண்பன் என்றும் கூறுவார்கள்.

சுவடிக் கூடங்கள், தொல்பொருட் சாலைகள், நூல் நிலையங்கள் என்பவற்றிலே நூல்கள் பாதுகாத்து வைக்கப் படுகின்றன. சில நிலையங்களிலே புத்தகங்களை நுண்படச் சுருளாக்கியும் பாதுகாக்கின்றார்கள்.

புத்தகங்களைச் சேகரித்தலும் பாதுகாத்தலும் சிறந்த பொழுது போக்காகக் கருதப்படுகின்றன. **புத்தகங்களை இரவல் வாங்கித் தொலைத்தல் தீய பழக்கம்''** என்று கூறிப் புத்தகம் சிரித்தது. திறந்திருந்த அந்தப் புத்தகத்தின் இதழ்கள் காற்றிலே சுருண்டு சிறகடித்தன. கோகுலன் மகிழ்ச்சியோடு பாடினான்.

**கண்ணுக்கினிய புத்தகமே,**
**கதைகள் சொல்வாய் புத்தகமே,**
**வண்ண மலரில் தேனெடுக்கும்**
**வண்டாய் வருவேன் உன்னிடமே**



1986 ஆம் ஆண்டு 19 வயதுக்கு உட்பட்ட மாணவிகளுக்கான யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட போட்டியில் முதலிடம் பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி அணியினைப் படத்தில் காணலாம்.

இடமிருந்து வலம்: அகிலா தெய்வேந்திரம், வினோதினி அரியம், வனஜா தருமரட்னம், சுகந்தி இராசதுரை, டெய்சி பேரின்பநாயகம், விஜிதா செல்வம், சங்கரி பாலேந்திரா.

# உங்கள் நோக்கு

என் மனதைக் கிள்ளி எடுத்த திங்கள் இதழே! மணம் பரப்பும் பல அம்சங்கள் மகிழத் தக்கதாகவும், மாணவரின் சிந்தனைக்கு விருந்தூட்டுவதுவதாகவும் உள்ளன.

இதனை நமக்களித்த உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு நன்றி.

சூசைப்பிள்ளை மதன்பாபு
15, 2ம் குறுக்குத்தெரு,
பாசையூர்,
யாழ்ப்பாணம்.

சிந்தனைக்கு விருந்து தரும் எண்போட்டி, சிறுவர் கதைகள், துணுக்குக் குவியல் தரும் அர்ச்சுனு, சஞ்சீவியைப் போல் சரித்திரம் படைக்க வேண்டும்.

எம். எம். அபூபக்கர்,
மசூதி வீதி,
பெரிய கடை
மன்னுர்.

கருத்துமிக்க கட்டுரைகள், கவிதைகள், துணுக்குக் குவியல்கள், கணிதப் புதிர்களை அள்ளித் தரும் அர்ச்சுனு மாணவருக்கு ஏற்ற தொழில்நுட்பக் கட்டுரைகளையும் வழங்க வேண்டும்.

செல்வன் சி. மோகனராஜ்
சிவகமலவாசம்,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

முதல் இதழிலேயே புது மெருகு தெரிகிறது

துணுக்குக் குவியல், குட்டி மாமா, லண்டன் வாழ்வு, அறிவுலக அறிமுகம் போன்றவை சிறப்பானவை.

செல்வன் மு. ஹீதரன்,
86/1, பலாலி வீதி,
திருநெல்வேலி.

முதல் இதழ் அட்டைப் படம் சஞ்சிகைக்குப் பொருத்தமாக உள்ளது.

துணுக்குக் குவியல் கல்கண்டை நினைவூட்டுகிறது. உலக அரங்கு விரிவாக அமைய வேண்டும்.

செல்வன் ப. சிறிகாந்தன்,
58, வை. எம். சி. ஏ,
இயக்கச்சி.

கணிதத் துறையினிலே கலங்க வைத்தாய் என்னை. வள்ளுவன் மொழியினையும் வடித்தெனக்குத் தந்திடுவாய்.

செல்வன் ஏ.எஸ். தயாநிதி,
விக்னேஸ்வராக் கல்லூரி,
கரவெட்டி.

துணுக்குக் குவியல் வெகு ஜோர்.

குட்டிமாமா கதை நல்ல கதை. குட்டி மாமாவுக்கு ஆபத்து இல்லாமல் காப்பாற்றும்படி வேண்டுகிறேன்.

'லண்டன் வாழ்வு'' கட்டுரையை வாசித்த பின்னர் அங்கு போகின்ற ஆசை எனக்கு ஏற்பட்டுள்ளது. கணிதப் புதிர் நன்ருக உள்ளது.

ஒவ்வொரு மலரிலும் ''எண் சிலம்பம்'' இடம்பெற வேண்டும்.

9 ஆம் ஆண்டு படிக்கும் நான் அர்ச்சுனு சிறுவர் வட்டத்தில் இடம்பெற விரும்புகிறேன். எங்களையும் அனுமதிக்கும்படி கெஞ்சிக் கேட்கிறேன்.

க. பார்த்தீபன்,
358/8, நாவலர் வீதி,
நல்லூர்.

அன்புள்ள தம்பி,

உமது அன்பு வேண்டுகோளை ஏற்கிறோம். ஆண்டு 11 படிப்பவர்களும் இவ்வட்டத்தில் சேரலாம் என்று இவ்விதழில் அறிவிக்கிறோம்.

—ஆசிரியர்,

எல்லாத் துறைகளிலும் பல விடயங்களைத் தாங்கி வரும் அர்ச்சுனுவில் ஆங்கிலத்திலும் எமக்கு விளங்கக்கூடிய சில விடயங்களைப் பிரசுரித்தல் நன்று.

செல்வன் தி. இராஜ்குமார்,
புலவர் இல்லம்,
உடுப்பிட்டி.

சிங்களத்தில் ''மிகிர'' என்னும் சிறுவர் வார சஞ்சிகை, விஞ்ஞான வார சஞ்சிகைகள் நிறைய வெளிவருகின்றன.

தமிழில் அர்ச்சுனு மலர்வது மகிழ்ச்சி.

சித்திரத் தொடர்கதைப் போட்டி சிறுவர்களிடையே நடாத்தி சிறந்தவற்றைப் பிரசுரியுங்கள்.

அட்டைப்பட ஓவியம் சிறப்பாக உள்ளது. துணுக்குக் குவியல் தரமானது.

செல்வி க. கலைவாணி
கன்னியர் மடம் மகா வித்தியாலயம்,
இளவாலை.

அர்ச்சுனா பெப்ரவரி இதழ் வாசித்தேன் இந்தியப் பத்திரிகைகளுக்கு ஈடான தோற்றம், பொலிவு, கண்கவர் அட்டை கவர்ச்சி அளிக்கின்றது.

தமிழினத்தின் சோதனை மிக்க இன்றைய கால கட்டத்தில் — அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து குறைந்த செலவுடன் இப்படி ஒரு சஞ்சிகை வெளியிட முடியுமா என எண்ணியவர்களுக்கு ஒரு சவாலாக புறப்பட்டுவிட்டான் அர்ச்சுனா.

மாணவர்களின் படைப்புகளுக்கு மதிப்பளிக்கும் அர்ச்சுனாக்கு இளவல்களின் அன்பும் ஆதரவும் என்றும் கிடைக்கும்.

முயற்சியில் சளைக்காமல் மாதம் தோறும் பிந்தாமல் வெளிவர வேண்டும் என வேண்டுகிறேன்.

சர்மா மாஸ்டர்,
முருகமூர்த்தி வித்தியாசாலை,
உடுவில்.

சிறுவர்களின் சிந்தனைக்கு உகந்த கதைகளையும், பெரியோர்கள் வாசித்து உணரக் கூடிய சமூக சீர்திருத்தச் சிறுவர் கதைகளையும் திறமையாக ஆசிரியர் பிரசுரித்துள்ளார்.

மாணவர்களுடைய கட்டுரைகளைப் பிரசுரித்து எதிர் காலத்தில் சிறந்த எழுத்தாளர்களை உருவாக்குவதற்கு அர்ச்சுனா ஒரு சமர்ப்பணம்.

வாழ்க! வளர்க! அர்ச்சுனாவின் தமிழ்ப்பணி.

கே. எஸ். குமாரராஜன்
இரத்தின வாசம்,
அல்வாய் தெற்கு,
வதிரி.

# விடிவு காணும் நாள் எந்த நாளோ?



செல்வன் பா. மகாலிங்கசிவம்

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நடாத்திய 1986ஆம் ஆண்டு நிறுவியவர் நினைவு நாட் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை.**

நித்தமுமே வியர்வைசிந்தி ஓய்ந்தி டாது
நிலத்தினிலே மிகப்பாடு பட்டு ழைப்போர்
மெத்தவுமே பசிப்பிணியால் வாடு கின்றார்
மேதினியில் இவர்விடிவு காணு வாரோ?

கண்பெற்றும் கல்வியெனும் ஒளிகா ணாதே
காலமெலாம் அறியாமை இருளில் வாழ்வோர்
மண்ணிடையே கல்வியினைப் பெறுவ தான
வாழ்க்கையினை எய்தும்நாள் எந்த நாளோ?

சாதியினிற் பலகூறிப் பிரிவு செய்தே
தரையினிலே துன்பமுறும் நமது மக்கள்
நீதிநெறி எதுவென்ற உணர்வை உற்று
நிலத்தினிலே ஒன்றுபடும் நாள்தான் என்றோ?

கொடுக்காது தமக்கென்றே பொருளைச் சேர்த்து
குவலயத்தே துன்பமுறும் செல்வரெல்லாம்
கொடுக்கின்ற கருணையுளம் கொண்டோ ராகிக்
குவலயத்தே நன்மைசெயல் எந்த நாளோ?

பணத்தாலே வாங்காது மனிதர் தம்மைப்
பண்பாலே வாங்குநிலை விடிதல் என்றோ?
குணத்தாலே சிறந்தோர்கள் துன்ப மெல்லாம்
குவலயத்தே தீர்ந்திடுநாள் எந்த நாளோ?

பிள்ளைபெறும் பொறியாகப் பெண்ணை இங்கு
பெரும்பாலோர் எண்ணுகின்ற நிலைமை மாறி
உள்ளபடி பெண்கள்சம உரிமை பெற்று
உலகத்தில் உயர்கின்ற விடிவு என்றோ?

சீதனத்தைப் பெற்றபின்பே மணத்தல் என்ற
சீர்அற்ற இருள்உற்ற நிலைமை மாறி
சீதனத்தை விரும்பாது பெண்ணின் நல்ல
குணங்களையே விரும்புவிடி காலை என்றோ?

கொள்கையொன்று செயலொன்றாய் எண்ணிவாழும்
குறைமதியோர் உளத்திருளை அகற்றி நின்று
கொள்கைவழி வாழ்கின்ற விடியல் வாழ்வு
குவலயத்தே மலர்ந்திடுதல் எந்த நாளோ?

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

உலக அரங்கில்

அபிராமி வரதன்

# சிறையில் வாடும் சிறுவர்கள்

பூங்காவில் விளையாடி மகிழ வேண்டியவர்கள் சிறுவர்கள்.

ஆனல் இவர்கள் இன்று சிறையில் வாடுகிருர்கள். கொடுமைகளை அனுபவிக்கிருர்கள்.

இச்சிறுவர்கள் தென்னுபிரிக்கக் கறுப்பினத்தவர்கள். தென்னுபிரிக்காவில் வெள்ளையர் சிறுபான்மையினர். இவர்கள் ஆட்சி செய்கிருர்கள்.

பெரும்பான்மையினர் கறுப்பினத்தவர்கள். இருப்பினும் ஆளப்படுகிருர்கள். இனவெறி, இன ஒதுக்கல் அங்கு நீண்ட காலமாக நிலவுகிறது. இதனை எதிர்த்து அவர்கள் போராடுகிருர்கள்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆனல் விசாரணை நடக்கவில்லை. இருப்பினும் இச் சிறுவர்களைச் சிறைக்கு அனுப்பி உள்ளார்கள்.

இச்சிறுவர்களின் தொகை 300 என்று அரசே ஏற்றுள்ளது. ஆனல் கறுப்பின இயக்கங்கள் இந்தத் தொகை ஆயிரக் கணக்கு என்று விளக்கி உள்ளன. இச்சிறுவர்கள் பெரும்பாலும் பன்னிரண்டு வயதானவர்கள்.

## ஐ. நா. பிரேரணை

தென்னுபிரிக்காவின் இன வெறியைக் கண்டித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஒரு பிரேரணை இம்மாதம் விவாதிக்கப்பட்டது.

தென்னுபிரிக்காவுக்கு எதிராகப் பொருளாதாரத்தடையைக் கொண்டு வரவேண்டும் என்பதே இப்பிரேரணை.

1. தென்னுபிரிக்க நாட்டுக்குக் கடன் வழங்கல்.

2. அங்கு முதலீடு செய்தல்.

3. அந்த நாட்டுடன் விமானப் போக்குவரத்து நடாத்தல்.

4. அந்த நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்தல்.

5. அந்த நாட்டுக்கு எண்ணெய், பெற்ருேலிய உற்பத்திப் பொருட்கள், ஆயுதங்களை ஏற்றுமதி செய்தல்.

—ஆகிய இவற்றை ஐக்கிய நாடுகள் சபை உறுப்பின நாடுகள் நிறுத்த வேண்டும்.

இப்படி சர்வதேச ரீதியில் பொருளாதாரத் தடை ஏற்படுத்த வேண்டும்.

இத்தகைய தடை மூலம் தென்னுபிரிக்க அரசின் இன வெறிக் கொள்கை செயல்களைக் கண்டிக்க வேண்டும் என்பதுதான் இப்பிரேரணையின் நோக்கம்.

## தோல்வி

ஆனல் பதினைந்து நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இப் பிரேரணைதோல்விஅடைந்தது

அமெரிக்கா, பிரித்தானியா, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. சீனு, ரஷ்யா உட்படப் பல நாடுகள் ஆதரித்தன. ஜப்பானும், பிரான்ஸ்சும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இத்தகைய பிரேரணை ஐ. நா. வின் பாதுகாப்புச் சபையில் நிறைவேறவிடாது நீண்ட காலமாகத் தடை செய்து வருகின்றன, பிரித்தானியாவும், அமெரிக்காவும்.

இதன் காரணமாக பிரித்தானியாவுடன் வர்த்தகத் தொடர்புகளைத் துண்டிக்க வேண்டும் என்ற கருத்து ஆபிரிக்க நாடுகளில் நிலவுகின்றது,

சென்ற ஆண்டு ஹாராரேயில் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்றது. தென்னுபிரிக்காவின் இனவாதப் போக்கை இம்மாநாடும் கண்டித்தது.

கடவுள் மனிதனைப் படைக்கும்போது, அவசர புத்தியுடன் அரை வேக்காடாகச் சிலரை எடுத்தான். அவர்கள் வெள்ளையர்கள்.

நன்கு வெந்த பின்னர் சிலரை எடுத்தான். அவர்கள் தான் கறுப்பினத்தவர்கள்.

இப்படி இனவெறி பற்றி வண. பிதா டுட்டு கதை சொல்வார்.

நாகரிக உலகம் இன வெறியைக் கண்டிக்க வேண்டும். சிறுவர்களை விடுதலை செய்யும்படி கோரிக்கைவிட வேண்டும்.

பாதகஞ் செய்பவரைக் கண்டால் — நீ
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா — அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா

—பாரதி

# ஆபத்தில் உதவிய சாரணீயம்

சி. இராமச்சந்திரா

## சமுத்திரச் சாரணர் சாதனை

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் இவ்வாண்டு நடைபெறவுள்ள உலக சாரண யம்பூரிகளில் பங்குபெற உள்ளார்கள்.

செல்வன் வை. சு. சர்வானந்தர் அவுஸ்திரேலியாவிலும், செல்வன் து. மனோகரன் யப்பானிலும் நடைபெறும் யம்பூரிகளில் பங்கு பெறுவார்கள்.

### செல்வன் வை சு. சர்வானந்தர்

சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். அவர் நான்காம் வகுப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்த ஆண்டே குருளை சாரணராகச் சேர்ந்து கொண்டார். பின் சாரணராகி 1986 ஆம் ஆண்டு ஜனாதிபதி விருதைப் பெற்றார். அத்துடன் சமுத்திர சாரணராகவும் திகழ்கிறார்.

இவரின் தகப்பனாரும் சகோதரர்களும் சாரணர்களாக இருந்தார்கள். தாய் தன் பாடசாலை வழிகாட்டி இயக்கத்தில் உறுப்பினராக இருந்தார் தற்பொழுது13ஆம் ஆண்டு கணிதப் பிரிவில் படித்துக் கொண்டிருக்கின்றார்.

இவரின் பேத்தியார் விழுந்து கைமுறிவு ஏற்பட்ட பொழுது சூழல் பொருட்களைக் கொண்டு தன் முதலுதவி அறிவைச் செயல்படுத்தி நோயாளிக்கு உபகாரம் செய்தார்.

இவர் பொழுதுபோக்காகப் புகைப்படவியலைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார். பாடசாலைப் படப்பிடிப்பாளராகவும் தமிழ் மன்றத் தலைவராகவும் திகழ்கின்றார். இவருக்கு இத்துறைகளின் ஈடுபாட்டிற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தவர்களுள் பாடசாலை அதிபர் திரு. ராஜன் கதிர்காமரும், திரு, கே. திஸ்சராசாவும் முதன்மை பெறுவர்.

### செல்வன் து. மனோகரன்

வட்டுக்கோட்டைத் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, வட்டு. இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராகவும் தற்பொழுது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவராக இவரது பாடசாலை வாழ்க்கை அமைந்துள்ளது. இவர் வட்டு. இந்துக் கல்லூரியில் இருக்கும் பொழுது சாரண இயக்கத்தில் சேர்ந்தார். பின் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் சாரணர் இயக்கத்தில் தொடர்ந்து இயங்கி 1986 ஆம் ஆண்டு ஜனாதிபதி விருதைப் பெற்றார். அத்துடன் சமுத்திர சாரணராகவும் திகழ்கின்றார்.

இவரின் தாய் தன் பாடசாலை வழிகாட்டி இயக்கத்தில் உறுப்பினராக இருந்தார்.

தற்பொழுது இவர் க.பொ.த. உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருக்கின்றார்.

கேணியில் குளிக்கச் சென்று கரையேற முடியாமல் தண்ணீரில் தாண்டு தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு பெரியவரை நீந்திச் சென்று கரைக்குக் கொண்டு வந்து அவரின் உயிரைக் காற்பாற்றினார்.

ஓய்வு நேரத்தை வை. எம். எச். ஏ. வேலைகளிலும், உதைபந்தாட்டத்திலும் கழிக்கின்றார். இவரைச் சாரண இயக்கத்தில் ஈடுபட ஊக்குவித்தவர்களுள் பாடசாலை அதிபர் திரு. ராஜன் கதிர்காமரும், திரு. கே. திஸ்சராஜா, திரு. ப. விஜயகுமார் ஆகியோர் முக்கியமானவர்கள்.

### சபாஷ் மாணவர்களே!

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான விஞ்ஞான அறிவுப் போட்டியில் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக் குழுவினரை முகப்பு அட்டையில் காணலாம்.

இடமிருந்து வலம்: எஸ். மணிவண்ணன், தே. நக்கீரன், ப. ரமேஷ், சு. இராதன் மார்க்கண்டன், செ. தேவகுமார்.

## வேட்டைக்குப் போன வேந்தன்

காட்டு விலங்கொன்று
கலகம் புரிகிறதாம் - அது
நாட்டில் புகுந்து தினம்
நம் வளத்தைச் சிதைக்கிறதாம்
கோட்டை முரசங்கள்
பேரிகை கொட்ட - மன்னர்
வேட்டைக்குப் புறப்பட்டார்
வென்று ஆட்சி காத்திடவே!

நீட்டிய துப்பாக்கி ஒலி
கேட்டுக் கிளர்ந்து வேங்கை
சினந்து உறுமியெழ
அரசர் படை அஞ்சிக்
குலைநடுங்கி விழுந்தோட - அவர்
வாட்டமுற்றுர்! தன்
''வலிமைத் திறன்'' கண்டார்!

வேட்டைக்குப் போன வேந்தர்
வேங்கைகளைக் கைவிட்டு - சிறு
காட்டுப் பிராணிகளைக்
கரடி ஒணுன் தவளைகளைக்
கூட்டில் அடைத்தும்
குற்றுயிராய்க் கொன்றழித்தும்
''இனிக் காட்டு விலங்கதன்
கலகம் அழிந்தது'' - என்றுர்.

நெடுந்தீவு லக்ஸ்மன்

✱ ✱ ✱ ✱ ✱ ✱

கதை முடிப்போம்: 1

## எப்படிப் பந்தை எடுப்பது?

பல ஆண்டுகளுக்கு முன்னே யாதவன் என்ற சிறுவன் வாழ்ந்தான். அவன் மிகவும் கெட்டிக்காரன். விவேகமும், செயல் திறனும் உள்ளவன்.

ஒரு நாள் அவன் தனது தோழர்களுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தான். அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த இடத்துக்கு அருகே ஒரு மரம் நின்றது. அதன் வேரில் ஒரு பொந்து (குழி) இருந்தது அவர்களது பந்து அதற்குள்ளே வீழ்ந்தது.

ஒருவன் குனிந்தான். தனது கையைப் பொந்துக்குள் விட்டான். பந்து அவனது கைக்கு எட்டவில்லை. அவனுல் பந்தை எடுக்க முடியவில்லை.

இன்னெருவன் நீண்ட மூங்கில் தடியைக் கொண்டுவந்தான். அதனைக் குழிக்குள் செலுத்திப் பந்தை எடுக்க முயன்றுன். அவனுலும் பந்தை எடுக்க முடியவில்லை.

யாதவன் பந்து இருக்கும் குழியருகே வந்தான். அவன் சிறிது நேரம் என்ன செய்யலாம் என்று எண்ணினுன். திடீரென அவன் எல்லோரையும் அழைத்தான்.

''எல்லோரும் எனது வீட்டுக்கு வாருங்கள்'' என்று கூவியபடி ஓடினுன். வீட்டில் இருந்த வாளி ஒன்றை எடுத்தான். நீண்ட கயிற்றையும் எடுத்தான்.

''எல்லோரும் வாருங்கள்'' என்று கூவியபடி மீண்டும் ஓடினுன்.....


தம்பி தங்கைகளே!

மேலே உள்ள கதையைப் படித்து விட்டீர்கள் அல்லவா? யாதவன் பின்னர் என்ன, என்ன செய்தான்? எப்படிப் பந்தை வெளியே எடுத்தான்?, என்று எண்ணிப் பாருங்கள்.

உங்கள் சிந்தனையைத் தொடர்ந்து ஓட விடுங்கள்.

(அடுத்த இதழில் கதை முடிந்தது எப்படி என்று பாருங்கள்.) (ஆ......ர்)

கொழும்பில் பிரச்சினை என்றார்கள்... அப்பா வரவேயில்லை. உண்மையை உணர்ந்து, அப்பா இல்லாத பாதிப்பை உணரச் சில நாட்கள் சென்றன.



# தம்பி! நீ நல்ல பிள்ளை

(சிறப்புச் சிறுகதை)

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

**வா**னம் நன்றாக இருண்டு போய் இருந்தது. குளிர் காற்று உடலைச் சிலிர்க்க வைக்க மழை எந்த நிமிடமும் பொழியலாம் போல தெரிந்தது.

மழை என்றால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். மழைக்கூடாக கொஞ்ச தூரம் ஓடிப்போய் முழுமையாக நனைந்து கொண்டு வந்தால் எப்படி இருக்கும் என்று சின்னப்பிள்ளையாக இருக்கும் போது நினைப்பதுண்டு

வீட்டின் ஜன்னல் கரையோரமாக மழை பெய்யும் காட்சியை பார்த்துக்கொண்டு நின்று அம்மா கவனிக்காத நேரம் வெளியே வந்து வீட்டின் தாழ்வாரத்தில் நின்றவாறு பேப்பர் கப்பல் செய்வதை மறக்க முடியுமா?

பேப்பர் கப்பல் மழை நீரில் மிதக்கவிட்ட அடுத்த நிமிஷமே மூழ்கடிக்கப் படுவதையும் கவனிக்காமல் தொடர்ந்து கப்பல்கள் செய்வதை-

நாலைந்து வருடங்களுக்கு முன்னால் ஆறாம் வகுப்பா ஏழாம் வகுப்பா ஞாபகமில்லை, ஒருநாள் விடாமல் நாள் முழுக்க மழை பெய்துகொண்டிருந்தது. நிலத்தில் கால் வைக்கவே சில்லென்று குளிர்.

பக்கத்துவீட்டு கணேசனும் நானும் வீட்டின் முன் படியோடு முட்டி மோதிக் கொண்டு நின்ற வெள்ளத்தில் கால் நனைப்பதும் எடுப்பதுமாக விளையாடிக்கொண்டு இருந்தோம்.

என்ன யோசனைவந்ததோ ஒற்றைக்காலை நனைத்துக் கொண்டு நின்ற கணேசனை சுலபமாகத் தள்ளிவிட அவன் வெள்ளத்தினுள் வீழ்ந்தான்.

பழங்காலத்து வீடு என்பதால் வீட்டின் முன்படி நல்ல உயரம் எனவே அந்த மட்டத்தோடு நின்ற வெள்ளத்தின் அளவும் கூட.

பொத்தென்று விழுந்த கணேசன் அதிர்ச்சியுடன் எழுந்து நின்று பெரிதாய் அழத்தொடங்கினான். கீழே விழுந்து எழுந்தபடியால் அவன் முழுமையாக நனைந்து விட்டான்.

விழுந்த இடத்திலேயே எழுந்து நின்று அழுதுகொண்டு நின்றபடியால் மழை வேறு அவனை நனைத்துக்கொண்டிருந்தது.

பயம் என்னைப் பற்றிக் கொள்ள "கணேசா உள்ளுக்கு வாடா" என்றேன்.

அவன் என்கோரிக்கையைக் காதில் விழுத்தியவனாகத் தெரியவில்லை. தொடர்ந்து அழுதுகொண்டு இருந்தான் பயம் என்னை மோசமாகத் தாக்க நானும் மழைக்குள் இறங்கி அவனைப் பிடித்து இழுத்து "வாடா உள்ளுக்கு அம்மா வரப்போறா" என்று சொன்னேன். அவன் என்னை பழிவாங்கவோ என்னவோ அசைய மறுத்துவிட்டான். நிலைமை மோசமாவதாலும், பயத்தின் காரணத்தாலும் எனக்கும் அழுகை வரவே என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கும் கண்களுடன் படியேற,

அம்மா வந்து சேர்ந்தார். கணேசன் அழுதுகொண்டும், மழையில் நனைந்து கொண்டும் நிற்பதுடன் என் கோபத்தையும் கண்ட அம்மாவுக்கு விடயம் விளங்கிவிட்டது என்ருலும்,

கணேசனிடம் பூரணமாக விசாரணை நடத்திய பின்னர் அன்று அம்மா அடித்த அடி இன்றுகூட இப்போது இந்த மாரிகாலத்து சூழ்நிலையில் எனக்கு ஞாபகம் வருகின்றது.

அம்மா அடித்த பின்னர் அன்று இரவு என்னை தன்னருகில் இருத்தி சொன்ன அறிவுரைகளைக் கோபத்துடன் செவிமடுத்த நான் பின்னர் அதனை ஏற்றுக்கொண்டதால் போலும்,

குறும்பு வேலைகளை தவிர்த்துக் கொண்டேன். கணேசனை மழை வெள்ளத்தினுள் தள்ளி விழுத்திய அந்த செயல் தான் எனது கடைசி குறும்பு செயலாகக் கூட இருக்கலாம்.

அப்போதும் சரி இப்போதும் சரி அம்மாவுக்குத் தான் நானும் வீட்டில் உள்ள ஏனையவர்களும் பயம். காரணம் அப்போது அப்பா வீட்டில் இல்லை.

கொழும்பில் வேலை செய்த அவர் மாதம் ஒரு தடவையோ இரண்டு மாதத்திற்கு பின்போ வருவார். வந்து நிற்பதும் சில நாட்கள்தான். நிற்கும் நாட்களில் எங்களோடு அம்மாவின் பாஷையின்படி 'செல்லம் பொழிவதோடு' சரி.

அதுகாரணமாக அவருக்கு நாங்கள் பயப்படுவதில்லை.

மூன்றுவருஷம் இருக்குமா? திடீர் என்று கொழும்பில் பிரச்சனை என்ருர்கள் எல்லா இடமும் பரபரப்பு முதலில் நாங்கள் அதனை உணரவில்லை.

யார் யாரோ எல்லாம் வீட்டுக்கு வந்தார்கள். சொந்தக்காரர்கள், நண்பர்கள் அம்மா அழத் தொடங்கினு அந்த அழுகை தொடர்கதையாயிற்று.

அப்பா பிறகு வரவேயில்லை. அந்த உண்மையை உணர்ந்து அப்பா இல்லாத தன் தாக்கத்தை உணர சில நாட்கள் எடுத்தன.

அந்த நிகழ்வு எங்கள் குடும்பத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியது. முற்றிலும் சோகமயமான அம்மா அந்த சோகத்தின் ஊடாக ஒருவிதமான வைரம் பாய்ந்த மனநிலையோடு முன்பைவிட எங்கள் மீது அதிக அக்கறை கொண்ட அம்மாவாக மாறி விட்டார்.

எங்கள் படிப்பு எங்கள் வளர்ச்சி இவைதான் அம்மாவுக்கு முக்கியமாயின. அப்பா இல்லாத வெறுமையை இப்போது நினைத்தாலும் தாங்க முடியாது.

கணேசனை மழை வெள்ளத்தினுள் தள்ளி விழுத்திய மாரிகாலத்து மாதங்களில் ஒரு தடவை அப்பா கொழும்பால் வந்து நின்றபோது அம்மா நடந்த சம்பவங்களை சொன்னு

எங்களோடு ''செல்லம் பொழிந்து'' கொண்டு இருந்த அப்பா என்னை அதிசயமாக பார்த்தார்.

அம்மா அடித்த அந்த சம்பவமும் அதனல் அப்போது எனக்கு இருந்த வேதனையும் ஞாபகம் வரவே என் கண்கள் கலங்கத் தொடங்கின.

''சின்னப்பிள்ளையள் விளையாட்டாக அப்படித்தான்விளையாடும் அதைப்போய் பெரிசாய் எடுக்கக்கூடாது. என்ரை குஞ்சன் நல்ல பிள்ளை'' என்று என்னை மடியில் இருத்தி கொஞ்சினுர்.

மடியில் இருத்தி கொஞ்சி மகிழும் வயதை நான் அப்போது தாண்டியிருந்தாலும் கடைசிப்பிள்ளை என்பதால் அதற்கு நான் ஏற்றவனுக இருந்தேன்.

இருண்டு போய் இருக்கும் வானத்தைப் பார்த்தபடி சைக்கிளில் வரும்போது எனக்கு இந்த பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

மழைகாலத்தில் மழையை கண்டால் போதும் கணேசனை தள்ளி விழுத்திய நிகழ்ச்சியும் அம்மாவின் தண்டனையும், அப்பாவின் சமாதானமும் இப்போது அப்பா இல்லாத சூழ்நிலையும்.

நெஞ்சத்தில் உண்டான வேதனையை மறைக்க என்ன செய்யலாம். யோசனையை வேறு எங்காவது திருப்பவேண்டும். அது இயலக்கூடிய காரியமா?

ரீயூஷனுக்கு வரும்போது மழை பெய்துகொண்டு இருந்தபடியால் வழக்கமாக என்னுடன் வரும் சுரேசும், மோகனும் வரவில்லை. எனவே திரும்பி வரும்போது தனியனுகி விட்டேன்.

இப்போது முன்பைவிட அம்மாவின் கெடுபிடி அதிகம். ரியூசன் முடிந்து உரிய நேரத்துக்குப் போய்ச் சேராவிட்டால் வீட்டின் கேற்றடியில் அம்மா காவலுக்கு நிற்பார்.

ஆகப் பிந்தினுல் விறுவிறுவென்று நடந்து வரும் அம்மாவை தூரத்தில் வரும் போதே காணலாம். "உங்

களுக்கு ஏன் இந்தக் கஷ்டம்'' என்றுல்........

அம்மாவின் கண்கள் கலங்குவதைத் தவிர வேறு பதிலே விசேடமாக எதிர் பார்க்க முடியாது.

''தகப்பன் இல்லாத பிள்ளேயள். கொப்பருக்கு நடந்த மாதிரி உங்களுக்கும் நடந்தால் என்ரை நிலைமை என்னடா'' என்றுதான் கேட்பா.

அம்மாவின் அந்த வேதனே நிறைந்த காட்சியைப் பார்க் கவோ, தாங்கிக் கொள் ளவோ என்னுல் முடியாது.

எனவே நேரத்துக்கு வீடு போய்ச் சேருவதில் எப்போ தும் கவனமாக இருப்பேன்.

இன்றைக்கு

வழக்கமாகப் போய்ச் சேரும் நேரத்தைவிட நன்ரு கப் பிந்திவிட்டது. மழைக் காலத்து இருட்டு பகல் பொழு தினே வெகுவாகச் சுருக்கி விட்டபடியால் இருட்டத் தொடங்கிவிட்டது. ''உவனேக் காணேல்லே'' என்று புறு புறுத்தபடி அம்மா கேற்றடி யிலோ, ஒழுங்கை முகப்பிலோ நிற்கலாம்.

இல்லாவிட்டால் என்னேத் தேடி நடக்கக் கூடத் தொடங்கியிருக்கலாம். தற் காலத்து யாழ்ப்பாணத் துச் சூழ்நிலே தாய் தகப்ப னுக்கு ஆறுதல் தரக்கூடிய சூழ்நிலேயா?

ரியூசன் உரிய நேரத்துக் குத்தான் முடிந்தது. நானும் வழக்கமாகப் போய்ச் சேரும் நேரத்துக்கு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்திருக்கலாம்.

வழியில் அந்தப் பிரச்சனே நடக்காது இருந்தால்,

அம்மாவுக்கு உண்மை யைச் சொல்லலாமா? அம்மா ஏற்றுக் கொள்ளுவாரா? அல் லது பேசுவாரா? சைக்கிளில் வரும்போது இதே யோசனே யாக இருந்தது.

ரோட்டால் வந்து எங் கள் ஒழுங்கைக்குத் திரும்பிய போதே அம்மா ஒழுங்கை முகப்பில் நின்று கொண்டிருந் தார்.

''என்னடா நடந்தது'' கேள்வியில் வெம்மை தெரிந் தது. ''நான் இஞ்சை என்ன பாடுபட்டு இருப்பன் என்று தெரியுமே'' என்று சொல்லிக் கொண்டு போன அம்மா வைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

''ரியூசன் முடிஞ்சு வரேக்க வழியில ஒரு பிரச் சனே அம்மா''

''பிரச்சனே எண்டால்''

''ரோட்டால போன வயதுபோன ஒரு கிழவரை வேகமாக வந்த கார் தட்டிப் போட்டு போட்டுது. பாவம் அந்தக் கிழவருக்குக் காலில் காயம் மழைகாலம் எண்ட தாலேயோ என்னவோ ரோட் டில சனமுமில்லே. அந்தக் கிழ வரை அப்பிடியே விட்டுட்டு வாறது சரியில்லே என்று அக்கம் பக்கத்து ஆட்களேக் கூட்டிக் கொண்டு வந்து தூக்கி ஆஸ்பத்திரியில் சேர்த் துப் போட்டு வாறன்'' என்று சொல்லிக் கொண்டு அம்மாவைப் பார்த்தேன்.

இது ஒரு மனிதாபிமான பிரச்சினே அம்மா என்ன சொல்லுவார்.

அம்மாவின் கண்கள் கலங்கின. ' நீ நல்ல பிள்ளே'' என்று மேலும் பேச முடியா மல் தடுமாறி ''எண்பத்தி மூன்றில் கொப்பரும் வெட் டுப்பட்டு உப்பிடி ரோட்டில தான் கிடந்தார். உன்னேப் போல ஒருவன் அவரைக் காப்பாற்றி இருந்தால்......'' என்று சொல்லி அம்மா அழுது,

' நீ நல்ல பிள்ளே. நீ நல்ல மனிசனுக வாழ வேணும். ஒரு நல்ல சிறுவன் நல்ல மனிசனுக வரலாம்...'' அம்மா சொல்லிக் கொண்டு போனு.

நான் மெய் மறந்து நின் றேன்.

'' அர்ச்சுனு'' மூன்ருவது இதழ் உங்கள் கரங்களில் தவழும் இவ் வேளேயில்........! உங்களுடன் நேரிலே சந்திக்கும் ஒரு வாய்ப்புக் கிட்டியதாக நாம் உணருகின்ருேம். ''அர்ச்சுனு'' பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களேத் தவருது எழுதியனுப்புங்கள். ''உங்கள் நோக்கு'' என்ற பகுதியில் அவை இடம்பெறும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**உங்கள் நோக்கு**

அர்ச்சுனு,

அஞ்சல் பெட்டி எண்; 23 யாழ்ப்பாணம்.

# எனது "அம்மன்" எப்போது வருவாள்?

எனது செல்லப்பிராணி பூனை ஆகும். நான் எனது மாமா வீட்டிற்கு சென்றபொழுது அந்தப் பூனையை எனது மாமா எனக்குத் தந்தார். நான் அந்தப் பூனையை எனது வீட்டிற்கு எடுத்து வந்தேன். நான் அம்மாவிடம் சென்று இதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டேன். அதற்கு அம்மா அம்மன் என்று பெயர் வைக்கச் சொன்னார். அது வெள்ளையும் கறுப்பும் சேர்ந்த நிறம் உடையது - அது மிகவும் அழகாய் இருந்தது. நான் அதற்குப் பாலும், சோறும் ஊட்டி வளர்த்தேன்.

நான் ஒரு நாள் பாடசாலைக்கு சென்றபோது அது என்னுடன் வந்தது. நான் அதன் முதுகில் தடவி அதை நிற்கச் செய்து பாடசாலைக்குத் திரும்பினேன். நான் பாடசாலையில் இருந்து வருமட்டும் அது சாப்பிடாமல் இருந்தது. நான் அம்மாவிடம் சென்று ஏன் எனது அம்மனுக்கு சாப்பாடு போடவில்லை என்று கேட்டேன். அதற்கு அம்மா நான் உணவு போட்டேன் அது தான் சாப்பிடவில்லை என்றார். அதற்கு 'நானே' சாப்பாடு போட்டேன். அதுவும் சாப்பிட்டது.

நான் ஒரு நாள் பந்தடித்து விளையாடும் பொழுது அம்மனும் என்னுடன் விளையாட வந்தது. நான் பந்தை எடுக்கச் சென்றபொழுது ஒரு தென்னோலை எனக்கு மேல் விழ வந்தபொழுது அம்மன் அந்தப் பந்தைத் தட்டிவிட்டது. நான் உடனே அந்த தென்னைமரத்தை விட்டு விலகி அந்தப் பந்தை எடுக்கச் சென்றேன். அந்த ஓலை நிலத்திலே விழுந்தது. அந்தப் பூனை என்னைக் காப்பாற்றி விட்டது. நான் அதற்கு நன்றி

செல்வி க. தேவராணி
வண்ணை இளையதம்பி த. க. பாடசாலை.

கூறி அந்தப் பூனையின் முதுகிலே தடவி விட்டு படிக்கச் சென்றேன். அதுவும் எனக்கருகே இருந்தது.

சில நாட்கள் கழிந்தன. எனது அம்மன் பல குட்டிகள் போட்டது நான் அதற்கு நல்ல சத்துள்ள உணவுகளை ஊட்டி வளர்த்தேன். சில நாட்களின் பின் எனது அம்மனைக் காணவில்லை. நான் எங்கிருந்தாலும் எனது அம்மனை மறக்கவே மாட்டேன். அம்மனைக் காணவில்லை என்று கவலையாகவே இருக்கிறது.

எனது அம்மன் எப்ப வருவாள்?

---

சுருக்கெழுத்து முறையைப் பூர்த்தி செய்ய சேர் ஐசாக் பிட்மனுக்கு எவ்வளவு காலம் பிடித்தது தெரியுமா? நாள்தோறும் பத்து மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் பதினைந்து ஆண்டுகள் உழைத்தார். அப்படியான கடின உழைப்பின் பயன்தான் சுருக்கெழுத்து முறை.

---

பூமிக்கு அடுத்ததாக, சூரியனுக்கு எதிர்த்திசையில் இருக்கும் கிரகம் செவ்வாய். பதினைந்து வருடங்களுக்கு ஒரு தடவை பூமிக் குச் சமீபமாக செவ்வாய் வருகிறது. இப்படி கிட்ட வருவதற்கு வான சாஸ்திரத்தில் 'செவ்வாயின் மிகவாய்ப்பான எதிர்ப்பு'' என அழைப்பர். 1956, 1971, ஆகிய வருடங்களுக்குப் பின் 1986 ல் மீண் டும் அது பூமிக்கண்மையில் வந்தது.

அடுத்த தடவை பூமிக்குச் சமீபமாக செவ் வாய் இந்த நூற்றுண்டில் வரமாட்டாது. ஆம் 21 ஆம் நூற்றுண்டில் 2001 ஆம் வரு டத்தில்தான் அது பூமிக்குச் சமீபமாக வரும்.

# செந்நிறமான

15 வருடத்திக்கு ஒரு தடவை பூமிக்குச் சமீபமாக செல்வாய் வருவதற்குரிய கணக்கு சுலபமானது.

பூமி சூரியனை ஒரு தடவை சுற்றிவர 365¼நாட்கள் ஆகும்செவ்வாய் 687 நாட்களில் சுற்றி வருகிறது. இரண்டும் ஒரு தடவை ஒன்றுக்கொன்று சமீபமாக வரும்.

15 பூமியின் வருடங்கள் 8 செவ்வாய் வருடங்களுக்குச் சரி. ஆகவே 15 வருடத் துக்கு ஒரு தடவை செவ்வாய் பூமிக்கு மிகக் கிட்டவாக வரும். (1.8809 என்பதற்குப் பதிலாக 1.88 என எடுத்துக் கொண்டதன் மூலம், சமீகரணத்தைச் சற்றுச் சுலபமாக்கி ஞேம்.)

செவ்வாயின் விட்டம் சுமார் 4,270 மைல். சூரியனில் இருந்து சுமார் 142,000,000 மைல் தூரத்தில் இருக்கிறது. சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம் 678 நாட்கள். தன்னைத்தானே சுற்ற எடுக்கும் காலம் 24½ மணி. (இது பூமியின் மணிக்கணக்கு) செவ் வாய்க்கு இரண்டு உபகிரகங்கள் உண்டு.

கி. பி. 1877ல் பூமிக்குச் சமீபமாக செவ் வாய் வந்தபோது ''ஜியோவான்னி வெர்ஜி னியோ ஷியாப்பரெலி'' என்ற இத்தாலிய வானியல் அறிஞர் அதனைப் பற்றி ஆராய்ந்து

**''செவ்வாய்'' என்றவுடன் நம் மவர்களுக்கு தோஷம் தான் மனதில் தோன்றும். ஆனுல்! அதுவும் ஒரு கிரகம். அதன் வியத்தகு விந்தையை இவ் அறி வியல் கட்டுரையில் நோக்கலாம்.**

வந்தார். செவ்வாயில் குறுக்கும் நெடுக்கு மாக பலகால்வாய்கள் அமைந்திருக்கின்றன எனக்கூறி உலகத்தை ஆச்சரியத்துக்கு உள் ளாக்கினுர்.

செவ்வாயில் ஒரு காலத்தில் மிக நாகரீக மடைந்த மக்கள் வாழ்ந்தார்கள் என்ற கருத்தைக் காலஞ்சென்ற ''பெப்சிவல்லோ வெல்'' என்ற வானியலறிஞர் வெளியிட் டார்.

# செவ்வாய்

சூரியனுக்குச் சமீபத்தில் உள்ள சிறிய திண்மையான நிலக்கிரகங்கள் நான்கில் செவ் வாய் நான்காவதாகும். செவ்வாயின் அச்சு, பூமியின் அச்சைப்போல சரிந்திருக்கிறது. இதனுல் கோடைகாலமும், கார்காலமும் மாறிமாறி ஏற்படுகின்றன. கார்காலக் கோளத்தில் துருவப் பகுதியில் உள்ள பனிக் கவிவு அல்லது திடமான காபன்டைஓட் சைட் நிரட்சரேகை வரை பரவுகின்றது. பின் கோடை காலத்தில் துருவத்தை நோக் கிப் பின்னேறி மறைந்து விடுகிறது, பல வித மான மேக அமைப்புக்களைக் காணலாம். மஞ்சள் நிறமான தூசு முகில்கள் விரைவாகச் செல்வதையும் சில சமயங்களில் செவ்வாயின் தரைப் பகுதியையே அவை மறைத்து விடு வதையும் அவதானிக்கலாம்.

செவ்வாயில் சமுத்திரங்கள் இல்லை. அங்கே நீரே கிடையாது; இருந்தாலும் திரவ ரூபத்தில் இருக்கிறதா என்பது சந்தேகத்துக் குரியது. செவ்வாயின் உட்பகுதி இயக்கமற் றது. இவ்விஷயத்தில் செவ்வாய் சந்திரனை

மிக ஒத்திருக்கிறது. செவ்வாயில் மலைத் தொடர்களும் - எமக்குத் தெரிந்தது போன்று கிடையா. ஆனுல் மிகப்பெரிய பள்ளங்கள் - சில 185 கிலோ மீற்றர் விட்டமுள்ளவை உள்ளன. இவற்றில் சில எரிமலைச் செயலினுல் உருவாகியிருக்கலாம்; ஆனுல் பெரும்பாலானவை விண்கற்களின் தாக்கத்தினுல் ஏற்பட்டிருக்க வேண்டும்.

விண்கற்களின் பிறப்பிடமாகிய அஸ்ற்ரெயிட் பிராந்தியத்துக்கு மிக அருகாமையில் செவ்வாய் இருப்பதால், பூமியிலோ சந்திரனிலோ விண்கற்களினுல் ஏற்படும் தாக்கங்களிலும் மிகக் கூடிய தாக்கங்கள் செவ்வாயில் ஏற்படுவது நியாயமே. செவ்வாயிலுள்ள பள்ளங்களின் மத்தியில் சிகரங்கள், கோபுரங்கள் உள்ளன. பூமியில் அரிப்பு நிகழ்வதுபோல செவ்வாயில் நிகழ்வதில்லை. அங்கே தொடர்ச்சியாக காற்று வேகமாக வீசுவதோ அல்லது மலை தோன்றுவதோ கிடையாது. காலத்துக்குக் காலம் தூசு முகில்கள் வீசிய போதிலும் அவை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என்ற உண்மையை, செவ்வாய்ப் பள்ளங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாததிலிருந்து ஊகிக்கலாம்.

செவ்வாய்க்கு இரு உபகிரகங்கள் உண்டு. முதல் முதலாக இவை 1877 ல் அசப்ஹால்' என்ற வானியலறிஞரினுல் காணப்பட்டன. வெளியிலுள்ள உபகிரகத்துக்கு 'டெய்மோஸ்' (பயங்கரம்) என்றும் உள்ளே உள்ள உபகிரகத்துக்கு வேபோஸ்' (அச்சம்) என்றும் பெயர்

## செல்வி தயாசீலி தியாகராசா

(தொடர் கல்வி நிறுவனம், உடுவில் மகளிர் கல்லூரி)

சூட்டப்பட்டது. டெய்மோஸ் சிறியது. வேபோஸிலும் பாதியளவு. ஆனுல் செவ்வாய் ஒரு தடவை தன்னைத்தானே சுற்றும் நேரத்தில் வேபோஸ் 3 தடவை செவ்வாயைச் சுற்றி வருகிறது. டெய்மோஸ் சுமார் 5 மைல் விட்டமுள்ளது. வேபோஸ் சுமார் இருமடங்கு விட்டமுள்ளது. செவ்வாயில் நின்று ஒருவர் வேபோஸைப் பார்த்தால் அது மேற்கில் உதித்து கிழக்கில் மறைவது போலத் தோன்றும்.

செவ்வாய் செந்நிறமானது. அங்குள்ள பாலை வனங்களின் காரணத்தினுல் இது சிவப்பாகத் தெரிகிறது. மனிதன் செவ்வாய்க்குச் செயற்கைக் கோள்களை அனுப்பி அதனைப் பற்றிப் பல தகவல்களை அறிந்து கொள்ள முடிந்தது. சந்திரனுக்குச் சென்றதுபோல செவ்வாய்க்கும் மனிதன் வெகுவிரைவில் சென்று திரும்புவான் என்பதில் சந்தேகமில்லை.

## பெண் பிரதமரின் அமைச்சரவையில் இடம் பிடித்த பெண்கள்

பெண் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையில் ஏழு பெண்கள் அமைச்சர்களாக இருக்கின்றனர்.

பிரதமரையும் சேர்த்தால் எட்டுப் பெண்கள் அமைச்சர் அவையில் உள்ளனர்.

''அமைச்சரவையில் 45 சதவீதம் பெண்களே. வேண்டுமானுல் இது ஒரு அரசியல் சாதனை என்று கூட நீங்கள் சொல்லலாம்''.

இப்படிக் கூறுகிருர் நோர்வே பிரதமரான திருமதி குரொ ஹார்லெம் பிரண்ட்லாந்து.

இவர் ஒரு டாக்டர்.

தீபன் ராஜா

## தொடர் நவீனம்

"கந்தையா அண்ணை இண்டைக்கு மாணிக்க நடராசரிட்டையல்லே போக வேணும். வாருங்கோ விடியவே போயிட்டு வந்துவிடுவம்" என்று கூறினார். "பொறு கொஞ்சம் இரு. தேத்தண்ணி குடிச்சுவிட்டுப் போவம்." இஞ்சருமப்பா தேத்தன் ணியைக் கொண்டு வாவன் இரண்டு பேருக்கும்"

தேத்தண்ணியைக் குடித்து விட்டு கந்தையரும், குட்டி மாமாவும் மாணிக்கநடராசர் வீட்டுக்குச் சென்றனர்.

வாசலில்நின்று "சட்டம்பியார்" என்று கந்தையர் கூப்பிட்டார். நல்ல வெள்ளை நிறம்; உயர்ந்த தோற்றம்; பஞ்சு போன்ற தலைமயிர்; சுமார் எண்பது வயது மதிக்கலாம். நெற்றியில் வீபூதி; சந்தனப் பொட்டு; கழுத்தில் உருத்திராச்ச மாலை அணிந்த அந்தப் பெரியவர் புன்சிரிப்புடன் இருவரையும் வரவேற்றார்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்பு பிள்ளைகளின் அழைப்பின் பேரில் சீமைக்குச் சென்றிருந்தார். சட்டம்பியாராக இருந்து இளைப்பாறிய அவர் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்த்தார். இரண்டு ஆண்பிள்ளைகளும் இங்கிலாந்தில் டாக்டராகவும், எஞ்சினியராகவும் கடமையாற்றுகின்றார்கள். அவர்களின் வற்புறுத்தலால் மனைவியுடன் இருபது வருடங்கள் சீமையில் வாழ்ந்திருக்கின்றார். கடைசிக் காலத்தில் சொந்த மண்ணிலேயே கண்ணைமூட வேண்டும் என்ற ஆசையால்




சொந்த ஊரில் வந்து வாழலானார். பிறந்த மண் பற்று அவரை விட்டுவிடவில்லை.

"வா கந்தையா, தம்பி வா" என்று இருவரையும் அழைத்துவிட்டு விருந்தையில் போடப்பட்டிருந்த கதிரையில் அமரச் செய்தார். தானும் ஒரு கதிரையில் அமர்ந்தார். அவர் அமரும்வரை காத்திருந்த குட்டிமாமாவும் கதிரையில் அமர்ந்தார் "கந்தையர் எப்படி உன்ரைபாடுகள்: தோட்டங்கள் எல்லாம் எப்பிடி?" என்றுகேட்டுவிட்டு "தம்பியைத் தெரியவில்லை" என்று கந்தையரைப் பார்த்தார் "இது எங்கடை செல்லப் பற்றை பெருமகன்" என்று குட்டிமாமாவை அறிமுகப் படுத்தி வைத்தார்.

"ஓ! எங்கடை செல்லப் பரோ!! உண்மையில் அந்த மனுசன் ஊருக்காகப் பாடு பட்ட ஒருஜீவன்" என்று பெரியவர் கூறிவிட்டு "வந்த காரியத்தைச் சொல்லுங்கோவன்" என்றார்

கந்தையர் குட்டிமாமாவைப் பார்த்தார். குட்டிமாமா கொஞ்சம் பயந்தவராகத் தான் வந்த நோக்கத்தைக் கூறலானார்.

"ஐயா எங்கடை ஊர்ப் பிள்ளைகள் மேல் வகுப்புப் படிப்பதற்கு ஒரு மகாவித்தியாலயம் இல்லை. கல்விக் கந்தோருக்குப் போய் கல்விப் பணிப்பாளரைக் கண்டு கேட்டம். அவர் கட்டடமும், விளையாட்டு இடமும் இருந்தால்தான் பாடசாலையை மகாவித்தியாலயம் ஆக்கமுடியும் என்று கூறிவிட்டார்." நீங்கள் பெரிய மனுசன் முதல் முதலாக உங்கடை கையாலேயே ஆரம்பித்து வைக்க வேண்டும் என்றுகூறி கையில் வைத்திருந்த கொப்பி ஒன்றை எழுந்து நின்று இரண்டு கைகளாலும் குட்டிமாமா பெரியவரிடம் கொடுத்தார்.

கந்தையர் ஆச்சரியத்துடன் குட்டிமாவைப் பார்த்தார்.

மாணிக்க நடராசர் கந்தையரையும் குட்டிமாமாவையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு "இஞ்சருமப்பா ஒருக்கால் வாரும்" என்று தனது மனைவியைக் கூப்பிட்டார்.

நல்ல நிறம், சாதாரண உயரம், வெள்ளைத் தலைமயிர். நெற்றியில் வீபூதிப் பூச்சும் குங்குமப் பொட்டும். சிவப்பு நிறத்தில் மண்ணிறக் கோடு போட்ட இந்தியாச் சேலை கட்டி பின் கொய்யகமும் போட்டிருந்த அந்த உருவத்தைக் கண்டதும் குட்டிமாமா எழுந்து நின்று தெய்வத்தை வழிபடுவதுபோல் இரு கரங் கூப்பி வணங்கினுர்.

பெரியவரும் தன் மனைவியைத் தனது பக்கத்திலுள்ள கதிரையில் இருக்கும்படி சொல்லிவிட்டு கந்தையரைக்



காட்டி இவரைத் தெரியுமே? என்று கேட்டார்.

''ஓம் கந்தையரை எனக்குத் தெரியும்தானே'' என்று சொல்லியபடி குட்டிமாமாவைப் பார்த்தார். ''இது எங்கடை செல்லப்பற்ரை பெருமகன்'' என்ருர் சட்டம்பியார்.

''ஏன் பாருங்கோ விடியக்காலத்தாலை கந்தையரும் தம்பியும் வந்திருக்கினம்'' என்று தன் கணவனைப் பார்த்துக் கேட்டார் அந்த அம்மா.

''இஞ்சை பார் கந்தையர்! எனக்கும் எங்கடை ஊர்ப் பள்ளிக்கூடம் பெரிய நிலைக்கு வரவேண்டும் எண்டு நீண்ட நாளாகப் பெரிய ஆசை. அந்த நாளிலை இந்தப் பள்ளிக் கூடத்தை எங்கடை கிராமத்திலை நிறுவுவதற்கு நாங்கள் பட்டபாடு சொல்லமுடியாது. எங்கடை பொன்னையரும் நானும் இதற்காக எவ்வளவு பாடுபட்டம் தெரியுமே! கின்டுபோட் இராசரத்தினம் ஐயா செய்த உதவியாலைதான் இந்தப் பள்ளிக்கூடம் நிலைச்சு நிற்கிது. எங்கடை பிள்ளைகளும் சைவப் பிள்ளைகளாக இண்டைக்கும் இருக்குதுகள். இராசரத்தினம் ஐயா செய்த உதவியை என்றும் நாங்கள் மறந்துவிடக்கூடாது. இப்பத்தான் பிள்ளைகளுக்கும் இராசரத்தினம் ஐயாவைப் பற்றி, அவர் சேவையைப் பற்றி நல்லாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இப்படியாகச் சட்டம்பியார் கதைத்துக் கொண்டிருக்கும்போது சடாசிவச் சட்டம்பியாரும் அங்கு வந்தார்.

அவர் வருகையைக் கண்ட குட்டிமாமாவும் கந்தையரும் எழுந்து நின்ருர்கள். மாணிக்க நடராசரும் ''வாருங்கோ சட்டம்பியார்'' என்று அவரை அழைத்து கதிரையில் உட்கார வைத்தார்.

நல்ல நேரத்தில்தான் சட்டம்பியார் வந்திருக்கின்ருர். நாங்களும் உங்களிட்டை ஒருக்கால் வர வேண்டும் எண்டுதான் இருந்த நாங்கள்'' என்று கந்தையர் கூறிமுடிக்க,

## அங்கம்: 3

''ஓம் கந்தையர் நானும் கேள்விப்பட்டனுன். இவன் தம்பி குட்டிமாமா வேம்படி வயிரவருக்குத் திருப்பணி வேலைகள் செய்விக்கிருனும். நல்ல புண்ணிய காரியம் வடிவாக ஒப்பேற வேணும்'' என்று ஆசிகள் கூறுவதுபோல் சடாசிவச் சட்டம்பியார் கூறி முடித்தார்.

புன் சிரிப்புடன் குட்டி மாமாவும் தலையை ஆட்டினுர்.

''இப்ப கந்தையரும், இவர் தம்பியும் எங்கடை பள்ளிக் கூடத்தை மகாவித்தியாலயமாக்க வேண்டுமாம் அதற்காகக் கல்விக் கந்தோரில் ஏற்கனவே கதைத்துவிட்டினமாம். இப்ப கட்டிடமும் விளையாட்டு மைதானமும் முடிக்க வேணுமாம். அதற்குத்தான் காசு சேர்க்க வந்திருக்கினம்'' என்று மாணிக்க நடராசர் சடாசிவச் சட்டம்பியாரைப் பார்த்துச் சொன்னுர்

மூன்று நாலு வருஷத்திற்கு முந்தி இவர் சின்னத்துரையற்றை மகன் பொன்னுச்சாமியும் பள்ளிக்கூடம் கட்டவெண்டு காசு சேர்த்துத் திரிந்தவன். காசும் இல்லை. ஆளும் இல்லை இப்ப'' என்ருர் சடாசிவச் சட்டம்பியார்.

''ஓம் சட்டம்பியார் நானும் ஐநூறு ரூபாய் கொடுத்து மாட்டுப் பட்டுப் போனன்'' என்று கந்தையரும் சொல்ல இச் சம்பாஷனையைக் கேட்டுக் கொண்டு இருந்த குட்டிமாமாவின் மனம் 'திக்' என்றது.

(வளரும்)

✯ அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி

# சமயம் காட்டும் அன்புநெறி

**நாயன்மார்கள் தாம் இறைவன் மீது கொண்ட ஆருக் காதலைப் பதிகங்களில் வெளிப்படுத்த சங்ககால அகத்திணை மரபைப் பின்பற்றினர். இவ்வகத்திணை மரபு இறைவன் மீது கொண்ட தெய்வீகக் காதலை உணர்த்தும். இம் மரபு நாயகன் - நாயகி பாவனையில் பாடுவதைக் குறிக்கும்.**

வாழ்க்கை வேறு சமயம் வேறு அல்ல வாழ்க்கையோடு இயைந்ததுதான் சமயம். இயைந்தது மட்டுமன்றி அதனை வெளிப்படுத்துவதும் சமயமே. இந்துசமயம் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ளது.

இந்து சமயம் கூறும் சமயக் கருத்துக்களும் தத்துவக் கருத்துக்களும் இந்து மக்களின் வாழ்க்கையோடு மிக நெருங்கிய தொடர்புள்ளனவாக விளங்குகின்றன. உலகிலே நிலவி வரும் சமயங்களுள்ளே இந்துசமயம் மிகவும் பழமையானது எனலாம். இந்துசமயப் பிரிவுகளுள்ளே தமிழ் மக்களிடையே நிலவிவரும் முக்கியமான பிரிவுகள் சைவமும் வைணவமும் ஆகும். சைவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்கள். வைணவர்கள் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்கள்.

சைவ மக்களும் வைணவ மக்களும் கடவுளைப் பக்தி மார்க்கத்தாலே வழிபடுகிறுர்கள். கடவுளிடத்தே தீவிர அன்பு கொண்டு வழிபடும் மார்க்கமே பக்தி மார்க்கம் அல்லது அன்புநெறி எனப்படும். இப்படி வழிபடும் பொழுது ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்ற மாதிரியான தொடர்பைக் கடவுளுடன் கொள்கிறுர்கள்.

சம்பந்தர் தந்தை மகன் உறவையும், அப்பர் ஆண்



டான் அடிமை உறவையும், சுந்தரர் தோழமை உறவையும், மாணிக்கவாசகர் குரு-சீட உறவையும் வெளிப்படுத்தினர். இவ்வாறே ஆழ்வார்களும் கண்ணனை மனித உறவில் கண்டு வழிபட்டனர். அதாவது குலசேகர ஆழ்வாரும் பெரியாழ்வாரும் கண்ணனைக் குழந்தையாகவும், ஆண்டாள் காதலனுகவும், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆண்டானுகவும் எண்ணி உருகினர். இவ்வன்பு நெறியால் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட வாய்ப்புண்டு.

அன்பே சிவம் என்று கூறுவது சைவசமயம் அன்பினுல் இறைவனை அடையும் முறையினைச் சைவசமயம் விளக்குகிறது. அன்பு வழியைக் கடைப்பிடித்துச் சிவன் சேவடி அடைந்தவர்கள் பலர். அவர்களுடைய வரலாறுகளை நாம் நினைவு கூர்ந்தால் அவையெல்லாம் அன்பின் கதைகள் என்பதை உணரமுடியும். சிவவழிபாட்டால் நமது உள்ளத்தில் ஆணவம் தேய்ந்து அன்பு மலரும்.

சைவசமயம் அன்புநெறியையே வற்புறுத்துகிறது. ஆன்மா ஈடேற்றமடைந்து முத்தியின்பம் பெறுவதற்கு இந்த அன்புநெறியே உதவுகிறது என்பது சைவசமய உண்மைப் பொருளாகும். சைவசமயக் கடவுளான 'சிவம்' என்பதற்கு "அன்பு" என்பது

செல்வி சி. நிரஞ்சனு
(மெதடிஸ்ட் பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.)

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM



பொருள். சைவசமய உண்மைப் பொருளாகும். சைவ சமய உண்மைகளைக் கண்டு நமக்கு உணர்த்திய நம்முன்னோர் உயிர்க்குலம் முழுவதிலும் சிவத்தைக் கண்டனர். உயிர்களிடையே சாதிமத பேதங்களைக் கண்டித்தனர். அதாவது ''ஒன்றே குலம்'', ''ஒருவனே தேவன்'' என்னும் கொள்கையில் வீறுநடை போட்டனர்.

அன்புத் தெய்வத்தை வழிபட்டு அன்பைப் பெருக்கிக் கொள்வது தான் நமது வாழ்வை நிறைவு படுத்தும் செல்வமாகும். ''அன்போடு உருகி அகம் குழைவார்க்குத் தான் தெய்வீகம் நிரம்பிய சிறப்பானவாழ்வு சித்திக்கும்'' என்கிறுர் பட்டினத்தடிகள்.

இந்து சமய மக்களின் சமூகத்தில் காலத்துக்குக் காலம் பல சைவ, வைணவ அடியார்கள் தோன்றித் தமது சமயத்தையும் சமயப்பற்றையும் மக்களிடையே வளர்த்தனர். அவ்வாறு அவர்கள் தமது சமயத்தை வளர்ப்பதற்கு அன்பு நெறியையே கையாண்டனர்.

இவ்வன்பு நெறியின் மூலம் சமயத்தைப் பரப்புவதற்கு முன்னேடியாக இருந்தவர்கள் காரைக்கால ம்மையாரும், முதலாழ்வார்கள் மூவரும் ஆவர். இவர்கள் சங்கம்மருவிய காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள். சமண பௌத்த வருகையால் நலிவுற்றிருந்த சைவ வைணவ சமயங்களை மீண்டும் பழைய உன்னத நிலைக்குக் கொண்டு வருவதற்கு அடிப்படையானவர்கள். இவர்கள் சைவ வைணவசமயங்களைமக்களிடையே நிலைநிறுத்துவதற்கு அன்புநெறியையே பயன்படுத்தினர். இந்த அன்பு வழியான பக்திநெறியே பல்லவர் காலத்தில் பக்தி வெள்ளமாகக் கரைபுரண்டோடியது. பக்தியை மக்களிடையே பரப்புவது மட்டுமன்றி அத்துடன் தமது ஆழ்ந்த காதலையும் சிறந்த பதிகங்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

பல்லவர்கால நாயன்மார்களும் ஆழ்வார்களும் முன்னையோர் இட்டுச் சென்ற அன்பு நெறியையே பின்பற்றி சைவ, வைணவ சமயங்களை வளர்த்தனர். பல்லவர்கால நாயன்மார்களுள் காலத்தால் முற்பட்டவரான கண்ணப்ப நாயனுருக்கு இறைவன் அருளிய அருளைக்கொண்டு அவரது பக்திச் சிறப்பை உணர முடிகிறது. அதுமட்டுமல்ல உள்ளன்புடன் இறைவனுக்குச் செய்யும் எதையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார் என்பதையும் கண்ணப்பர் இறைவனுக்கு இறைச்சி யமுதளித்த வரலாற்றைக் கொண்டு உய்த்துணர முடிகிறது.

இறைவனிடத்து அன்பு செலுத்துபவர்களிடையே சாதி சமய வேறுபாடு பாராட்டப்படுவதில்லை என்பதைப் புலையரான திருநாளைப்போவாரும் வேடரான கண்ணப்ப நாயனுரும் ஆழ்வார்களில் திருப்பாணுழ்வாரும் இறைவனடியார்களாகப் போற்றப்படுவது கொண்டு அறியலாம்.

பல்லவர்கால நாயன்மார்களும், ஆழ்வார்களும் முறையே தேவார திருவாசகங்கள், திவ்விய பிரபந்தங்கள் என்னும் பக்தி மழையால் மக்கள் நெஞ்சில் அன்புப் பயிரைத் தழைக்கச் செய்தனர். இவர்களுடைய பாடல்களைக் கேட்கும் போதெல்லாம் மனம் கசிந்துருகி ஆனந்தக் கண்ணீர் பெருகும்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தாம் இறைவன் மீது கொண்ட ஆருக் காதலைப் பதிகங்களில் வெளிப்படுத்துவதற்காக சங்ககால அகத்திணை மரபைப் பின்பற்றினர் இவ்வகத்திணை மரபு முன்பு உலகியல் காதலை வெளிப்படுத்தப் பயன்படுத்தப் பட்டது. இப்போது இறைவன் மீது கொண்ட தெய்வீகக் காதலை உணர்த்தி நின்றது. இம்மரபின் உதவியாலேயே ஆண்டாள் திருப்பாவை, திருமங்கை யாழ்வாரின் பெரிய திருமடல், சிறிய திருமடல், மணிவாசகரின் திருவெம்பாவை, திருக்கோவையார் போன்ற பக்தி இலக்கியங்கள் தோன்றின. இம்மரபு நாயகன் - நாயகி பாவனையில் பாடும் முறையைக் குறிக்கும்.

அன்பின் திறம் அவரவர் நிலைக்கேற்ப வெளிப்படுகிறது. தத்தம் இலட்சியங்களில், கடமைகளில் இறை உணர்வின் உச்சங்களை அடியவர் பலரும் வெளிக்காட்டினர். இந்த அடியார் குழாத்தினர் இறைவனுக்கு மட்டுமன்றி தம்மையொத்த அடியவருக்கும் அடியாராக விளங்கினர். உதாரணமாக சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகை என்னும் நூலில் தன்னைத் தவிர்ந்த ஏனைய அறுபத்திரண்டு அடியார்களுக்கும் தான் அடியவன் என்று கூறும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று தொடங்கும் பாடல் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

நாயன்மார்களுள் நால்குரவர் என்று அழைக்கப்படு

கின்ற சம்பந்தர், சுந்தரர், அப்பர், மணிவாசகர் என்போர் சரியை. கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு அன்பு மார்க்கங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தினர். தாமும் அந்நெறியில் ஒழுகினர். அப்பர் சரியை நெறியிலும் சம்பந்தர் கிரியை நெறியிலும், சுந்தரர் யோக நெறியிலும், மணிவாசகர் ஞான நெறியிலும் நின்று ஒழுகி முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகளை அடைந்தனர்.

அன்பின் அடிப்படையிலே வளர்ந்த சமயமான இந்து சமயம் வாய்மை தூய்மை பொறுமை தியாகம், பக்தி முதலிய உயர்ந்த பண்புகளால் மலர்ச்சியடைந்திருக்கின்றது என்பது உறுதியான உண்மையாகும். இந்துசமயம் அன்பின் வடிவாக இறைவனைக் காண்கிறது. அன்பின் வழியாக இறைவனைக் காட்டுகிறது. அடியார்களின் வாழ்வும் வரலாறுமே சமயம் காட்டும் அன்புநெறியை வளர்த்தது என்று கூறுவதில் மிகையில்லை.

**(உயர்தரப் பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை)**

எஸ்கிமோ இனத்தவர் மிகவும் குறைவாகவே இருதய நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். ஜப்பானியர்களைப் பொறுத்த அளவிலும் இது உண்மையே. காரணம் இவர்கள் பெரும் அளவில் மீனைத் தமது உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

## முயன்று பாருங்களேன்

# எண்சிலம்பம்

**அன்பார்ந்த மாணவ மணிகளே!**

கணிதத் துறையில் உங்கள் அறிவை வளர்க்கும் நோக்குடன் அர்ச்சுனுவில் எண்சிலம்பம் தொடர்ந்து வெளிவரும்.

எண் சிலம்பத்தைப் படியுங்கள். சிந்தியுங்கள். தேவையான இடத்தில் கணிதப் பிரச்சினைகளைச் செய்து பாருங்கள்.

விடைகளை எண்சிலம்பம் கூப்பனில் எழுதி அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பி வையுங்கள். இப்போட்டியில் நடுவர்களின் முடிவே இறுதியானது.

சரியான விடைகளை எழுதும் அதிர்ஷ்டசாலிக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

பரிசு பெற்றவர்கள் கடிதமூலம் அழைக்கப்படுவர். பரிசுக்குரியவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பரிசைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**பரிசு விபரம்:** முதலாம் பரிசு: ரூபா 50/=
இரண்டாம் பரிசு: ரூபா 25/=
மூன்றும் பரிசு: ரூபா 15/=

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 31-3 87

**அனுப்ப வேண்டிய முகவரி:**


எண்சிலம்பம் - 3,
''அர்ச்சுனு''
அஞ்சல்பெட்டி எண் 23,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

— ஆசிரியர் —

# எண் சிலம்பம்

ஆக்கம்:
உதங்கா

## போட்டி இலக்கம் - 3



பெயர் செல்வன்/செல்வி ..........................

..........................

முகவரி: ..........................

..........................

கையொப்பம் ..........................

### இடமிருந்து வலம்

(a) இதனை அதிர்ஷ்ட எண் என்பர்.

(b) 2, 3, 5, 7 இவற்றல் வகுக்கும்போது 1 மீதியாக வரும் எண்.

(e) தலைகீழாக வாசித்தால் 11 இன் 6 மடங்காகும்.

(g) 1936 இன் வர்க்கமூலம்

(h) பெப்ரவரி நாட்கள்

(j) $\frac{1}{4}$ ஐ நூற்றுவீதத்தில் கூறுவது

(l) $\frac{3}{8}$ இலீற்றர் மில்லி இலீற்றரில் உள்ளது.

(m) ஒழுங்கான அறுகோணியின் சமச்சீரச்சுகள்.

(n) ஒரு ஸ்கோரில் உள்ள பொருட்களின் எண்ணிக்கையின் நான்கு குறைய

(o) 111111 என்னும் அடி இரண்டில் உள்ள எண் அடிபத்தில்

(p) 30 பக்கங்கள் உள்ள ஒழுங்கான பல்கோணியின் புறக்கோணம்.

(r) கம்பியூட்டரில் உபயோகிக்கும் எண் அடி

(t) எண் அடி 20 இல் உள்ள எண் 408 அடிபத்தில்.

### மேலிருந்து கீழ்

(a) 3 இன் 4 ஆம் அடுக்கில் இரண்டு குறைய

(c) புறக்கோணம் $24^{\circ}$ பாகை உடைய ஒழுங்கான பல்கோணியின் பக்கங்கள்

(d) எண் அடி ஐந்தில் இது பதின்நான்கு அடிபத்தில்

(f) 91·4 இன் கிட்டிய இரட்டை எண்

(g) எண் அடி பதினறில் இதன் பெறுமதி அடிபத்தில் 69

(i) 10 இன் கனத்திற்கு 7 ஆம் முதன்மை எண்ணின் 10 மடங்கு குறைகிறது

(j) அடி பதினறில் இதன் மடக்கை 2 ஆகும்

(k) சதுர வெட்டு முகமுடைய கனவுருவின் சமச்சீர்த்தளங்களின் எண்ணிக்கை

(n) $3x + 27$ இன் பெறுமதி $x = -5$ ஆகும் போது

(p) அடி 225 இல் இதன் மடக்கை $\frac{1}{2}$ ஆகும்.

(q) ஒன்றைச் சேர்த்தால் 100 ஆகும்

(s) $x^2 - 21x - 22 = 0$ என்னும் சமன்பாட்டின் நேர்மூலம்.

சிவானந்த வித்தியாலயத்தில் நான் ஆறுவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது, எங்களுடைய ஆங்கிலப் பாட ஆசிரியராக இருந்தவர் ஒரு தனி ரகம்.

ஆஜானுபாகுவான தோற்றமுடைய அவர் கையில் பிரம்புடன் கம்பீரமாக வகுப்பறைக்குள் நுழைந்தால் மாணவர்கள் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவார்கள்.

ஆங்கில பாடம் கற்பிப்பதில் அவருக்கு இணை அவர்தான். அதேபோல் பிரம்படி கொடுப்பதிலும் அவருக்கு இணை அவர்தான்.

அவரைக் கண்டால் சில மாணவர்களின் உடல் இலேசாக நடுங்க ஆரம்பித்துவிடும். அவ்வளவு பயம்!

ஒரு நாள் பதினறுவரிகள் கொண்ட ஆங்கிலக் கவிதையை அடுத்த நாள் பாடமாக்கி வரவேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டார்.

**மாஸ்டர் சிவலிங்கம்**

“ஒரு வரி தவறினல் ஒரு உரி. பதினெட்டு வரிகளும் தெரியாவிட்டால் பதினெட்டு அடிகள் உப்புப் பிரம்பால் கிடைக்கும்” என்று எச்சரிக்கையும் செய்தார். எங்கள் ஆங்கில ஆசிரியர்.

அன்று இரவு எமது கிராமமான மஞ்சந்தொடுவாயிலே “அஸ்வமேதயாகம்” என்னும் நாட்டுக்கூத்து அரங்கேற்றப்பட்டது.

நாட்டுக் கூத்து மோகத்திலே ஆங்கிலக் கவிதையை மனனம் செய்ய மறந்து விட்டேன். நள்ளிரவு வேளையிலே நாட்டுக்கூத்துப் பார்த்துக் கொண்டிருந்த போதுதான் ஆசிரியர் தந்த ஆங்கிலக் கவிதையின் நினைவு வந்தது. அதையடுத்து என்னல் நாட்டுக் கூத்தை நிம்மதியாக ரசிக்க முடியவில்லை.

## உப்புப் பிரம்படி வாங்காமல் தப்ப உதவிய தந்திரம்

எங்களுடைய ஆசிரியர் ஒரு தனி ரகம். அதேபோல் பிரம்படி கொடுப்பதிலும் அவருக்கு நிகர் அவர்தான். அவரைக் கண்டால் சில மாணவர்களின் உடல் இலேசாக நடுங்க ஆரம்பித்து விடும். அவ்வளவு பயம்.

எனது கற்பனைக் கண் முன்னல் மாஸ்டர் உப்புப் பிரம்பு சகிதம் ஊழிக் கூத்து ஆட ஆரம்பித்து விட்டார்.

அதிகாலை வேளையில் வீட்டுக்கு விரைந்து ஆங்கிலக் கவிதையை எடுத்து மனனம் செய்ய ஆரம்பித்தேன்.

கண் விழித்துக் கூத்துப் பார்த்ததாலோ என்னமோ கவிதை மனத்தில் பதிய மறுத்தது. பகீரதப் பிரயத்தனம் பண்ணி ஆறுவரிகளைத்தான் மனப் பாடம் பண்ண முடிந்தது.

அன்று பாடசாலைக்குச் செல்லாமல் விடுவதற்கு என்னவெல்லாமோ செய்து பார்த்தேன். எனது பருப்பு அம்மாவிடம் அவியவில்லை. கடவுள் மீது பாரத்தைப் போட்டு விட்டு பாடசாலைக்குச் சென்றேன். பெரும்பாலான மாணவர்கள் பத்து வரிகளுக்கு மேல் மனனம் செய்திருந்தனர். ஆகக் குறைவாக மனனம் செய்திருந்தது நான்தான்.

மணி அடித்ததும் உப்புப் பிரம்புடன் மாஸ்டர் வகுப்புக்குள் நுழைந்தார். பிரம்புடன் அவரைக் கண்டதும், நான் மனனம் செய்திருந்த ஆறு வரிகளில் இரண்டு வரிகளை மறந்து விட்டேன். எவ்வளவுமுயன்றும் அவை நினைவுக்குவரவேயில்லை. ஆக நான்கு வரிகள்தான் பாடமாயிருந்தன.


பயத்தில் எனது உடல் இலேசாக நடுங்க ஆரம்பித்து விட்டது. இடைவிடாது கடவுள் நாமங்களை உச்சரித்துக் கொண்டிருந்தேன்.

ஆசிரியர் மாணவர்களிடம் கவிதையைக் கேட்க ஆரம்பித்தார். பத்து வரிகள் சொன்னவர்களைக் கூட அடிப்பதற்காக வாங்கின் மீது ஏற்றி விட்டார். எனதுமுறை வந்தது.

திடீரெனத் துள்ளி எழுந்தேன், கவிதையைத் தளதண்ணீர்ப் பாடமாக்கியவர்கள் கூறுவதைப் போல் கடுகதி ரயில் வேகத்திலே நான்கு வரிகளையும் கூறி ஆரம்பித்தேன்.

“நல்லது, இருக்கலாம்” என்று என்னைப் பாராட்டி விட்டு மற்ற மாணவரிடம் கேட்க ஆரம்பித்தார்ஆசிரியர்.

அப்போதுதான் எனக்கு நிம்மதியாக மூச்சு வெளி வந்தது. ★




திருச்செந்தூரன்

அங்கம்: 3

## விருந்து நடக்கிறது

வானம்பாடி நிலா முற்றத்தில் இருந்தது. நிலா முற்றத்திற்கு முன்னே பெரிய அறை ஒன்று இருந்தது. வானம்பாடி அதன் யன்னலினூடாகப் பார்த்தது. அங்கே பலர் ஒரு மேசையைச் சுற்றியிருந்து சாப்பிட்டார்கள். மேசை விரிப்புப் பால்போல வெண்மையாக இருந்தது. கத்திகள், முள்ளுக் கரண்டிகள், மதுக் கிண்ணங்கள், சீனத்து வட்டில்கள், தட்டங்கள் எல்லாம் பளபளத்தன. மேசையின் நடுவே ஒரு பூச்சாடி. அதில் பல நிறப் பூக்கள் நிறைந்திருந்தன. அங்கிருந்த மக்களின் முகங்கள் சிவந்து ஒளி வீசின. மதுவின் மயக்கத்தில் அவர்களது கண்கள் பாதி மூடியிருந்தன.

திடீரெனக் கீழே ஒரு சத்தம் கேட்டது. வானம்பாடி கீழே பார்த்தது. அங்கே அது முற்றிலும் வேறான ஒரு காட்சியைக் கண்டது. அங்கே ஒரு நீள்வட்டப் பலகை. அதில் ஒரு கத்தி. கத்திக்கு அருகே வாலும் தலையும் வெட்டப்பட்ட மீன் ஒரு குவியல், துண்டு துண்டாக வெட்டப்பட்ட இறைச்சி, ஓடு உடைக்கப்பட்ட சில சிங்க இறால்கள், துண்டு துண்டாக வெட்டப்பட்ட சில கோழிக் குஞ்சுகளும், தாராக்களும் அந்த அறையில் அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன.

அங்கு பல மனிதர்கள் பல வகையான வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இடுப்புக்குக் கீழ் மட்டும் ஆடை அணிந்திருந்தார்கள். அதில் எண்ணெய் சிதறியிருந்தது. அறையில் புகையும் நீராவியும் நிரம்பியிருந்தது. அடுப்புக்கு அருகே நின்றவன் இரும்புச் சட்டியில் பொரித்துக் கொண்டிருந்தான். சட்டியில் எண்ணெய் விட்டதும் நான்கு புறமும் சுவாலைவிட்டு எரிந்தது. வெப்பத்தால் அவனது முகமும் கைகளும் சிவந்தன. சமைக்கப்பட்ட உணவை வெள்ளை ஆடை அணிந்த ஒருவன் வண்ணமூட்டப்பட்ட சீனத் தட்டில் வைத்து மேல் மாடிக்குக் கொண்டு சென்றான்.

சிறிது நேரத்தின் பின் மேல் மாடியில் சிரிப்பொலி.

மேசையைச் சுற்றியிருந்த மனிதர் மீண்டும் கத்திகளையும் முள்ளுக்கரண்டிகளையும் பயன்படுத்தி உண்ணத் தொடங்கினார்கள்.

"கீழே உள்ளவர்கள் நோயுற்றிருக்கலாம், இல்லாவிட்டால் அவர்கள் ஏன் தொடர்ந்து நெருப்புக்கு அருகே நிற்க வேண்டும்? அவர்கள் அங்கே நின்று சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள். வேலை செய்வதால் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள் போலும்?" இவ்வாறு எண்ணியது.

வானம்பாடி அவர்களைக் கூர்ந்து கவனித்தது. தனது எண்ணம் தவறு என்ற முடிவுக்கு வந்தது.

"அவர்களுக்குத் தடிமன் பிடித்திருந்தால் அவர்கள் ஏன் வீட்டில் ஓய்வெடுக்கவில்லை. வேலை அவர்களுக்கு ஆர்வமூட்டுவதாக இருந்தால் அவர்கள் முகத்தில் ஏன் மகிழ்ச்சி இல்லை? அவர்களே சமைத்த உணவை அவர்கள் ஏன் உண்ணவில்லை? வெள்ளை உடை அணிந்தவர்களின் கட்டளைப்படியே அவர்கள் வேலை செய்கிறார்கள். அதனால்தான் அவர்கள்முகஞ்சுளிக்கிறார்கள்' அவர்கள் விரும்பி வேலை செய்யவில்லை. மற்றவர்கள் உண்ண வேண்டும் என்பதற்காக அவர்கள் வேலை செய்கிறார்கள்."

எந்த மனிதனும் மற்றவர்களுக்கு உணவு ஆக்க இயந்திரம்போல ஆகி விடுகிறார்கள் என்பதைக் கண்டு அது கவலை கொண்டது. அது சோர்வுடன் பாடத் தொடங்கியது.

பிறருக்காக ஆர்வமும் விருப்பமுமின்றி உழைக்கும் துரதிஷ்டம் பிடித்த மனிதர் மீது இரக்கம் கொண்டு அது பாடியது.

மற்றவர்க்காகத் துயரப்படும் அந்த மனிதர்களை அதனால் அதிக நேரம் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அது எங்காவது போய் ஓய்வெடுக்க விரும்பியது. அது தனது செட்டைகளை விரித்துப் பறந்து சென்றது.

---

55 வயது ரஞ்சித் தன்வர் தொர்ப்பச்சேன் சிகரட் புகைக்காதவர். மதுவைத் தொட்டும் பார்க்காதவர். அதற்கு பதிலாக எலுமிச்சைச் சாறு கலந்து தேநீரை விரும்பிக் குடிப்பார்.

---

## மீன் பிடிப்போமே

மீன் பிடிப்போமே! நாம் மீன் பிடிப்போமே!!
ஆழ்கடலில் சென்று நாம் மீன் பிடிப்போமே
மலைகள் போன்ற அலைகள் நம்மைஆட்டிவைப்பினும்
அரக்கன் போன்ற சுழல் காற்று சுற்றி வீசினும்
அச்சமின்றி ஆனந்தமாய் மீன் பிடிப்போமே
சுறுதிருக்கை விரால் திரளி விளைமீன் சுவையானவை
ஓரா ஒட்டி சீலா யாவும் விலை மிக்கவை
மீன் பிடிப்போமே நாம் மீன் பிடிப்போமே!
கைநிறையப் பணம் தேடி மீன் பிடிப்போமே!

**செல்வி ஜெ. ஜீவா**
ஆண்டு 9A
முருகமூர்த்தி வித்தியாசாலை
உடுவில்.

---

## மனத்தில் தோற்றுவித்தனர்

"இன்று நாம் வாழும் சமுதாயத்தில் நாம் புன்னகையைக் காணவில்லை. தும்பமும் துயரமும், அழுகையும் ஏக்கமும் கண்ணீரும் கம்பலையுமாக நாம் வாழும் உலகம் இருக்கிறது. ஏழ்மைக்கும் செல்வத்திற்கும் நடக்கும் போரும். உயர் சாதியானுக்கும் தாழ்ந்த சாதியானுக்கும் நடக்கும் போரும், அசுர சக்திகளுக்கும் மனிதசக்திகளுக்கும் நடக்கும் போரும் இன்று உலகையேகலங்க வைத்துக் கொண்டிருக்கின்றன.

இப்போர்களினால் வாழ்வே ஒரு சோககீதமாகி விட்டது. இப்போர்களை எவ்வளவு விரைவில் ஒழித்து விட முடியுமோ அவ்வளவு விரைவில் ஒழித்து விடவேண்டும். அதன் பின் போரொழிந்த சமத்துவ சமுதாயம் பிறக்கும். அதனைப் பூக்கவைக்கும் பணியில் எழுத்தாளன் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்ற கருத்தை உலகின் புகழ் பெற்றபேனா மன்னர்கள் என் மனத்தில் தோற்றுவித்தனர்."

**அ. ந. கந்தசாமி**

CHUNNAKAM



# யோகாசனம் பயில்வீர்

சனா சொக்கலிங்கம்

தலை கீழாக நிற்பதே யோகாசனம் எனப் பெரும்பாலானோர் கருதுகின்றனர். ஆனால் அது தவறு. மனிதனைத் தனது இரு கால்களிலும் இலகுவாக நிற்க வைப்பதே யோகாசனமாகும்.

பள்ளி மாணவர், நடுத்தர வயதினர், ஆண், பெண் யாவரும் செய்யலாம்.

அதிகாலையில் அல்லது மாலையில் செய்யலாம். ஆரம்ப சாதகர்கள் இரு வேளைகள் செய்தால் அதிக நன்மையுண்டு.

வெறும் வயிற்றில் அல்லது உணவு ஜீரணித்த பின்பே செய்ய வேண்டும். இதனால் தான் அதிகாலை அல்லது மாலை உகந்த நேரம்.

பயிற்சி முடிந்து பதினைந்து நிமிடங்கள் கழித்துக் குளிக்கலாம்.

ஆசனம் தினமும் செய்தால் அதிக நன்மை பயக்கும். சில தினங்கள் செய்யாது விட்டால் எதுவித தீங்கும் விளையாது.

ஆசனம் செய்துவிட்டு இடையில் நிறுத்தினாலும் எதுவித தீங்கும் நிகழாது.


சாத்வீக உணவு உண்பது சாலச் சிறந்தது. வேறு வகை உணவுப் பழக்கம் உள்ளவர்கள் படிப்படியாக சாத்வீக உணவிற்கு மாறிக் கொள்வது நன்று.

நோயுற்ற காலங்களில் பூரண சுகம் வரும்வரை சாந்தி ஆசனமே செய்யவும்.

ஆசனம் செய்தால் உடல் மெலிவதும் இல்லை; பெருப்பதும் இல்லை; சமநிலை அடையும்.

தகுந்த ஆசிரியர் வழிகாட்ட அந்தந்த நோய்க்கேற்ப ஆசனம் செய்தால் தீராத வியாதிகளாகிய தொய்வு, பீனிசம், சலரோகம் குணம் அடையும்.


ஆசனம் செய்யும்போது கட்டைக் காற்சட்டை, (றண்ணிங் சோட்) அணிதல் நன்று.



காற்றோட்ட அறையில் ஒரு விரிப்பின் மேல் செய்தல் வேண்டும்.

ஆசனங்கள் ஆசிரியர் கூறும் வரிசைக் கிரமப்படி செய்தல் வேண்டும்.

நேரத்திற்குத் தகுந்தபடி சில ஆசனங்களைக் குறைக்கலாம். ஆனால் எல்லா ஆசனங்களையும் செய்தால் அதிக பலன் உண்டு.



லியோ கழகம் நடாத்திய வாழ்த்துமடல் வரையும் போட்டியில் 12 வயதுக்குட்பட்ட மாணவர் பிரிவில் முதலிடம் பெற்ற செல்வி லோஜினி சண்முகராசாவைப் படத்தில் காணலாம். இவர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஆவார்.

# பாலனுக்குப் புத்தி வருமா?

"இராமசாமி மண்ணின் மகன். மண்ணையும் மழையையும் நம்பியே வாழ்க்கையை ஓட்டும் ஏழை விவசாயி. இவர் மனைவியின் பெயர் காமாட்சி. குடும்பத்தில் குத்துவிளக்காக விளங்கும் இவளுக்கு மூன்று குழந்தைகள் இருந்தனர்: மூத்த பிள்ளை ஆண்பிள்ளை. மற்றைய இருவரும் பெண்கள். இவர்களை வறுமை வாட்டியது.

ஒருநாள் காலை இராமசாமி கலப்பைகளுடன் வயலை நோக்கி நடக்கின்றான். அப்போது வயலில் இருக்கும் பச்சைப் பசேலென்ற பயிர்கள் இராமசாமியைத் தலை சாய்த்து வரவேற்பதுபோல் காற்றில் அசைகின்றன. இதனைக் காணும்போது இராமசாமியின் உடல் மகிழ்ச்சியால் பூரிப்படைகின்றது.

அடுத்த கணம் அவன் மனம் தனது குடும்பத்தை நோக்கிச் செல்கின்றது.

நேற்றுப் பாடசாலையில் இருந்து வந்த இரு பெண் குழந்தைகளும் பசியினால் கதறி அழுதனர். அதனைப் பார்க்கச் சகிக்காத காமாட்சி எங்கோ சென்று சொற்ப அரிசி கடனாக வாங்கி வந்தாள். அக்கிராமத்தில் அவர்களை நம்பி எவரும் கடன் கொடுப்பதில்லை. வாங்கி வந்த அரிசியை வைத்து கஞ்சி காய்ச்சி இரண்டு குழந்தைகளுக்கும் கொடுத்துவிட்டு, மிகுதியை மூத்த பையன் பாலனுக்கு வைத்தாள். பின்னர் பாலனுக்கு வைத்த கஞ்சியில் சிறிதளவு எடுத்து வயலில் வேலை செய்துவிட்டு களைப்புடன் திரும்பிய தனது கணவனுக்குக் கொடுத்து விட்டுப் பட்டினியாக இருக்கின்றாள். குழந்தைகள் பாடசாலைப் பரீட்சைக் கட்டணம் தரும்படி கேட்கின்றனர். இதையெல்லாம் நினைத்த ராமசாமி கண் கலங்குகின்றான்.

"டேய் பாலா! நான் எமது சொந்த மண்ணைக் கண்ணாக நேசிக்கிறவன்: அதைப்போல நீயும் நேசிக்கப்பழகு"- இப்படித் தகப்பனார் புத்திமதி கூறினார்.

பின்னர் தனக்குத்தானே "எனது கஷ்டம் இன்னும் கொஞ்சநாள் தான். பின்னர் இவ்வயலில் விளைந்த பயிர்களினால் நானும் மற்றவர்களைப் போல் பணக்காரன் ஆகிவிடுவேன்." என நினைத்துப் பூரிப்படைகிறான். அவனது பூரிப்பு ஒரு சில மணித்தியாலங்களே நீடித்தது.

வானம் மெல்ல மெல்ல கறுக்கத் தொடங்கியது. மின்னலோ கண்ணைப் பறித்தது. இடி முழக்கத்துடன் மழை பெருமாரியாகக் கொட்டத் தொடங்கியது. இதனைப் பார்த்ததுமே இராமசாமிக்குத் தலை ஏதோ செய்வது போன்று இருந்தது. வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிய வண்ணம் ஒருபுறம் உட்கார்ந்து விட்டான். ஆனால் தெய்வங்களோ இவனுடைய வாழ்க்கையில்தான் விளையாடி விட்டன. ஆம், வெள்ளத்தினால் பயிர்கள் மூடப்பட்டு விட்டன. இதனைப் பார்க்கச் சகிக்காத இராமசாமி நடைப் பிணமாய் வீடு திரும்பினான்.

வீட்டில் காமாட்சி அழுத வண்ணம் உட்கார்ந்து இருக்கிறாள். அவனது வீட்டில் பல தாள ஓசைகள் கேட்கின்றன. வீட்டுக்கூரை ஒழுகியது. அதில் இருந்து ஒழுகிய மழைத்துளிகளே அவ் ஓசைகளை எழுப்பின.

இராமசாமி வீடு திரும்பியதும் தமது பயிர்கள் அழிந்து விட்டதாகக் கூறி வாய்விட்டுக் கதறியழுகிறார். இதைக் கேட்ட காமாட்சி இடியோசை கேட்ட நாகம்போல் ஆகிவிடுகிறாள். இவர்களுக்கு மேலும் வறுமை தலைதூக்கி ஆடத் தொடங்கியது.

செல்வி சி. சாந்தினி
(நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)

அப்போது ஊர்ப் பெரியவர் வந்தார். இராமசாமிக்கு அறிவுரை கூறினார்.-

"திரும்பவும் இம்முறை நீ விவசாயம் செய். நான் பணம் உதவுகிறேன். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"

ஊர்ப் பெரியவரின் உதவியுடன் விவசாயத்தில் மீண்டும் ஈடுபட்டான்.

அடுத்த நாள் காலை இராமசாமி பல் துலக்கிய வண்ணம் கிணற்றடியை நோக்கிச் சென்றார். கிணற்றடியில் தனது மகன் பாலா அலட்சியமாக உட்கார்ந்து இருப்பதைக் கண்ட இராமசாமி மகனைக் கூப்பிட்டு 'பாலா இதோ பார் இன்று தான் கடவுள் கண் விழித்திருக்கிறார். விரைவாகக் கால் முகத்தைக் கழுவிப் புறப்படு. நேற்று அந்தப் பெரிய மனிசனிடம் காசு போய் வாங்கினேன். அந்தக் காசுக்கு விதைகள் வாங்க வேண்டும். நீ வந்தால் கொஞ்சம் உதவியாய் இருக்கும்'' என்றார்.

அதற்குப் பாலனோ மறுத்து விட்டான். பின்னர் தந்தை அவனை அதட்டிக் கூட்டிச் சென்றார். அப் பெரியார் கூறியபடி அந்நிலத்தைப் பண்படுத்தத் தொடங்கினான். இராமசாமி மிகவும் கஸ்டப்பட்டு வியர்வை சிந்தி உழைத்தான். ஆனால் பாலனோ இதில் ஈடுபடாமல் விலகி நடக்கத் தொடங்கினான். இது இராமசாமிக்கு மன வேதனையைக் கொடுத்தது.

அப்பெரியார் கூறியபடியே அவனுக்கு நல்ல விளைச்சல். எனினும் அவன் மனம் போனதடவைபோல் ஏதாவது ஆகிவிடுமோ எனப் பயந்த வண்ணம் இருந்தது. பூமாதேவி இம்முறை அவனுடன் விளையாடவில்லை. ஆமாம், அறுவடைக் காலம் வந்தது. அவ்வூரில் அவனுக்குக் கிடைத்த விளைச்சலைப் போல் யாருக்கும் கிடைக்கவில்லை. இராமசாமி தான் அறுவடை செய்தவற்றை விற்று பெரும் பணம் சேர்த்தான். அப்பெரியாரின் பணத்தைச் செலுத்தினான்.

இராமசாமி மேலும் விவசாயத்தைப் பெருக்கத் தொடங்கினான். அவனுக்கு ஒவ்வொரு தடவையும் பெரும் விளைச்சலே கிடைத்தது. அவனும் பணக்காரன் ஆனான்.

வறுமையில் வாடுவோர்க்கு இல்லையென்று கூறாமல் வாரி வழங்கினான். அவன் பணக்காரனாக இருந்த போதிலும் தனது விவசாயத்தைக் கைவிடவில்லை. விவசாயத் தொழிலைத் தனது கண்ணைப் போல் கருதினான்: ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து வயலுக்குச் சென்று வந்த பின்னரே உணவு உட்கொள்வான்.

இராமசாமியின் செல்வப் புதல்வனோ செல்வத்தில் மிதந்தான். தனது இஷ்டம் போல் நடக்கத் தொடங்கினான். எத்தனையோ முறை தனது தந்தையை நோக்கி "அப்பா இவ்வளவு பணம் இருந்தும் எதற்கு நீங்கள் மீண்டும் விவசாயம் செய்ய வேண்டும்'' எனக் கேட்பான். அதற்கு இராமசாமி "டேய் பாலா எம்மைப் பணக்காரனாக மாற்றியதே இந்த விவசாயமடா. இதையா விடச் சொல்கிறாய். டேய் பாலா நான் மண்ணைக் கண்ணாக நேசிக்கிறவன். அதைப்போல் நீயும் நேசிக்கப் பழகு'' என்றார்.

* *

முயன்று பாருங்களேன்

# கணிதப் புதிர்

ஒரு கமக்காரனிடத்தில் இருந்த சொத்துக்களை மூத்தமகனுக்கு $\frac{1}{2}$ பங்கும், இரண்டாம் மகனுக்கு $\frac{7}{18}$ பங்கும், மூன்றாம் மகனுக்கு $\frac{1}{12}$ பங்கும் கொடுக்குமாறு உயில் எழுதி வைத்தான். அவனிடம் 35 பசுக்கள் இருந்தன. அவற்றைப் பகிர்வதில் பிரச்சனை ஏற்பட்டது. பசுக்களைப் பின்னமாக்க முடியாதே! எனவே நீங்கள் இப்பிரச்சனையைத் தீர்த்துவைக்க உதவுங்கள்.

## மக்கள் மனமும் மகிழாதோ

காலையில் உதிக்கும் உதயனே
கதிரவன் என்ற பெயரோனே
மழையினைத் தந்திடும் உதயனே
நீ-மாலையில் மட்டும் மறைவதேன்?

கோள்களுக் கெல்லாம் தலைவனும்
கோளில் பெரிய உதயனே
பாரினைச் சுற்றி வருவதால்
பானு என்றுபெயர் பெற்றாய்

விண்ணில் உலாவரும் விண்மணியே
ஒருமுறை மண்ணில் வாராயோ?
மண்ணில் மட்டும் நீ வந்தால்
மக்கள் மனமும் மகிழாதோ?

**செல்வன் ப. சசிவர்ணன்**
*(யாழ். இந்துக்கல்லூரி)*
*(உறுப்புரிமை எண் 8)*

**எண்சிலம்பம்**
**போட்டி இலக்கம்: 2**
**விடைகள்:**
**இடமிருந்து வலம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | -- | 6 | 8 | 5 | -- | 2 |
| 6 | 4 | -- | 1 | -- | 1 | 8 |
| -- | 5 | 5 | -- | 1 | 8 | -- |
| 6 | -- | 1 | 5 | 6 | -- | 8 |
| -- | 3 | 2 | -- | 9 | 9 | -- |
| 2 | 6 | -- | 1 | -- | 1 | 2 |
| 4 | -- | 6 | 2 | 5 | -- | 8 |

**கணிதப்புதிர்: 2**

**விடை**

| | முதல் குவியல் | இரண்டாம் குவியல் | மூன்றாம் குவியல் |
|---|---|---|---|
| கடைசி நிலை | 32 | 32 | 32 |
| அதற்கு முன்நிலை | 16 | 32 | 48 |
| ,, ,, | 16 | 56 | 24 |
| ஆரம்ப நிலை | 44 | 28 | 24 |

## அர்ச்சுனா சிறுவர் வட்டம்

பாடசாலைகளில் ஆண்டு 10 ஆம் வகுப்பு வரை கல்விபயிலும் மாணவர்கள் 'அர்ச்சுனா' சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள் மட்டுமே 'அர்ச்சுனா'வின் சிறுவர் வட்டப் பகுதியில் இடம்பெறும். உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பின்வரும் கூப்பனை வெட்டி அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:

பொறுப்பாளர்,
"அர்ச்சுனா" சிறுவர் வட்டம்,
அஞ்சல் பெட்டி எண்: 23,
யாழ்ப்பாணம்.

"அர்ச்சுனா"
சிறுவர் வட்டம்
**கூப்பன்**

முழுப்பெயர்: செல்வன் / செல்வி..............
..........................................
..........................................
வகுப்பு:..................................
பாடசாலையின் பெயர்:........................
..........................................
முகவரி:...................................
..........................................
மாணவர் கையொப்பம்:.........................
..........................................
அதிபர் கையொப்பம்:..........................
..........................................

# விளையாட்டுத் துறை

## ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி

சர்வதேச கிரிக்கெட் ரசிகர்களிடையே தற்பொழுது பிரபல்யம் பெற்றிருப்பது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளே!

அண்மையில் நடைபெற்ற இலங்கை — இந்திய ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் ரசிகர்களைப் பெரிதும் களிப்பில் ஆழ்த்தின.

இலங்கை — இந்திய சர்வதேச ஒருநாள் போட்டி கௌஹாத்தியில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

46 ஆறு ஓவர்களை எதிர் கொண்ட இலங்கை அணி இந்திய பந்து வீச்சாளர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 145 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

டிலிப் மெண்டிஸ் 31 ஓட்டங்களையும், ரோய் டயஸ் 26 ஓட்டங்களையும், ரஞ்சன் மடுகல்ல ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிவ்லால் யாதேவ், ரவி சாஸ்திரி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும், கபில்தேவ், மதன்லால், மனிந்தர் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்திய அணி வெற்றிக்குத் தேவையான 146 ஓட்டங்களை இரண்டு விக்கெட்டுகளை மட்டும் இழந்து 27.3 ஓவர்களில் பெற்றது.

கிருஸ்ணமாச்சாரி சிறிகாந் 19 ஓட்டங்களையும், சுனில் கவாஸ்கர், திலிப் வெங்சாகர் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 70, 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

ருமேஷ் ரட்ணயக்க, ரவி ரட்ணயக்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராக இந்திய அணியின் ஆரம்ப துடுப்படி வீரர் சுனில் மனோகர் கவாஸ்கர் தெரிவானார்.

சண் ஜோண்சன்

இரண்டாவது ஒருநாள் போட்டி புதுடில்லியில் நடைபெற்றது.

இந்தப் போட்டியிலும் இலங்கை அணியே முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் ஒருநாள் போட்டியை இந்தியாவிடம் கோட்டைவிட்டதை மனதில் கொண்டு ஆடிய இலங்கை அணி வீரர்கள் 44 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றனர்.

அசந்தா குருசிங்க, அமல் டி சில்வா, அருச்சுனு ரணதுங்க, ரவி ரெட்ணயக்க ஆகியோர் முறையே 54, 51, 41, 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

ராஜகுல்கரணி 3 விக்கெட்டுக்களையும் கபில் தேவ் 2 விக்கெட்டுகளையும், அசாருதீன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

208 ஓட்டங்களை எதிர் கொண்ட இந்திய அணி மிகவும் லாவகமாகத் துடுப்பெடுத்தாடியது.

இந்திய அணி 41.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றிக்குத் தேவையான 209 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

திலிப் வெங்சாகர், சுனில் கவாஸ்கர். கிருஸ்ணமாச்சாரி சிறிகாந் ஆகியோர் முறையே 56, 36, 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

அர்ச்சுனு ரணதுங்க 2 விக்கெட்டுகளையும், ருமேஸ் ரட்ணயக்க, லபரோய் ஆகி

யோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்,

இந்தப் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராக இலங்கை அணி வீரர் அர்ச்சுனு ரணதுங்கா தெரிவானுர்.

மூன்ருவது ஒரு நாள் போட்டி பரோடாவில் நடைபெற்றது,

முதல் இரண்டு ஆட்டங்களிலும் இல்லாதவாறு இந்தப் போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி 43 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் இரண்டு போட்டிகளிலும் சோபிக்காத கிருஸ்ணமாச்சாரி சிறிகாந் இந்த ஆட்டத்தில் ரசிகர்களை ஏமாற்றவில்லை.

இவர் 63 ஓட்டங்களையும் சுனில் கவாஸ்கர் 69 ஓட்டங்களையும் ரவி சாஸ்திரி 20 ஓட்டங்களையும் திலிப் வெங்சாகர், ராமன் லம்பா ஆகியோர் தலா 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

லபரோய் 5 விக்கெட்டுகளையும் அனுரசிறி 2 விக்கெட்டுகளையும் ரவி ரட்ணுயக்க 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதற்குப் பதிலளித்து ஆடிய இலங்கை அணி 36.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. றஞ்சன் மடுகல்ல கையில் ஏற்பட்ட காயம் காரணமாக துடுப்பெடுத்தாடவில்லை.

ரவிசாஸ்திரி 3 விக்கெட்டுகளையும், சிவ்லால் யாதேவ் 2 விக்கெட்டுகளையும், ராஜகுல் கரணி, மணந்தர் சிங், கிருஸ்ணமாச்சாரி சிறிகாந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராக இரண்டாவது முறையாக சுனில் மனேகர் கவாஸ்கர் தெரிவு செய்யப்பட்டார்.

* * *


வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொ விஸ்ராஸ் வியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர் ____________
கல்லூரி ____________
வாக்காளர் பெயர் ____________
விலாசம் ____________
ஒப்பம் ____________




EARLALAI WEST
CHUNNAKAM



முயன்று பாருங்கள்

## சதுரங்களை பூர்த்தி செய்தல்

இங்கு ஒன்பது சதுரங்கள் தரப்பட்டுள்ளன. எல்லாச் சதுரங்களையும் பூர்த்திசெய்தால் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், மூலைப் பக்கமாகவும் உள்ள எண்களைக் கூட்டினுல் கூட்டுத்தொகை 15 ஆக அமையவேண்டும். 1 தொடக்கம் 9 வரை உள்ள எண்களை ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தலாம். முயன்று பாருங்கள்.

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

முயன்று பாருங்கள்: சதுரங்கள் பூர்த்தி செய்தல்

சென்ற இதழ் விடை

| | | |
|---|---|---|
| 6 | 7 | 2 |
| 8 | 3 | 4 |
| 1 | 5 | 9 |

முயன்று பாருங்கள் என்ற பகுதிக்கு ஏராளமாணவர்கள் தங்கள் விடைகளைப் பூர்த்தி செய்து அனுப்பியுள்ளார்கள். அவர்களில் அதிஷ்டசாலியாக வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி சு.கோமதி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

**செல்வி சு. கோமதிக்கு**
**எமது நல்வாழ்த்துக்கள்**

## மயிலும் நாரையும்

ஒரு மயில் தனது தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. ஆடும்போது தோகையின் அழகைக் கண்டு அது கர்வம் கொண்டது. உடனே அது மற்றப் பறவைகளையெல்லாம் கேலி செய்யத் தொடங்கியது.

அது காக்கையைப் பார்த்து, ''ஏ காக்கையே உனது இறக்கையையும் பார், எனது இறக்கையையும் பார்! எனக்குள்ள அழகில் ஆயிரத்தில் ஒரு பங்காவது உனக்குண்டா?'' என்றது. காகம் வெட்கி வாய் பேசாமலிருந்தது.

பிறகு மயில் குருவியைப் பார்த்து ''குருவியே, உன் கழுத்தையும் பார் என் கழுத்தையும் பார்! அழகு சிறிதும் இல்லாத நீ இருந்துதான் என்ன பயன்?'' என்றது. ''மயிலெங்கே நாமெங்கே!'' என்று நினைத்து, குருவியும் நாவெழாமல் இருந்தது.

மயிலுக்கோ கர்வம் மேலும் மேலும் அதிகரித்தது. அது அங்கிருந்த நாரையை விளித்து, ''ஏ நாரையே, வெள்ளை வெளேறென்றிருக்கிறதே உன் சிறகு. வெள்ளை நிறம் ஒரு நிறமா? எனது தோகையின் அழகைப் பார்!'' என்றது.

அதற்கு நாரை ''ஏ மயிலே, ஏன் வீணுகக் கர்வம் அடைகிருய்? உனது தோகை எத்தனை அழகாய்த்தான் இருக்கட்டுமே. அதனுல் உனக்கு என்ன பயன்? என்னைப்போல சிவ்வென்று கிளம்பி வானமெல்லாம் சஞ்சரிக்க உன்னுல் இயலுமா? சற்றும் இயலாது என் பதை அறிந்து, அடங்கி நட!'' என்றது.

மயில் நாணமுற்றுத் தோகையைச் சுருக்கிக் கொண்டு அப்பால் நகர்ந்தது.

ந. சாந்தகௌரி
(சாவகச்சேரி
இந்து மகளிர் மகா வித்தியாலயம்)

'' கல்வியே பெரும் செல்வம் ''
ஏனையவை எல்லாம் அழியும் தன்மையின.
ஆனுல்! கல்வியோ அறிவின்
உறைவிடமாய் நிலைத்து நிற்கும்.

23-10-1983
MAHANUHD



# ஆழமாக விரியும் கடல்

**சபா. புஸ்பநாதன்**

நாம் வாழும் பூமியின் பரப்பில் எவ்வளவு பெருங்கடல்கள் தோன்றின என்பது மிகவும் சுவையான செய்தியாகும். முதலில் சூரியன் தோன்றியதாகவும் அதிலிருந்து சிதறிய துகள்களே பூமியும் ஏனைய கோள்களும் என்று முன்பு நிலவிய கருத்துக்கள் ஏற்க முடியாதனவாகிவிட்டன.

சூரியனும் ஏனைய கோள்களும் ஒரே காலத்தில்தான் தோன்றின. அண்டவெளியில் துகள் குவியல்கள் ஒன்று சேர்ந்து கோள்கள் உருவாகின. பூமி உருவான காலத்தில் பூமியைச் சூழ்ந்து காற்று இருக்கவில்லை. ஆனால் நீராவியும் வாயுக்களும் பாறையோடு பூமியினுள்ளே இருந்திருக்கின்றன.

புவியீர்ப்பால் அதன் ஆக்கப் பொருட்கள் மேலும் மேலும் இறுக்கமடைந்தன. அதனால் வெப்பநிலை உயர்ந்தது. இறுக்கத்தாலும் வெப்பநிலை உயர்வாலும் பூமிக்கடியில் இருந்த வாயுக்களும் நீராவியும் நசுக்கப்பட்டு வெளியேறின. வாயுக் குமிழ்கள் மேலெழுந்த போது மிகச் சத்தத்துடன் நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமியிலிருந்து வெப்பம் வெளியேறியபோதுதான் எரிமலைகள் தோன்றின. இந்த நிலை தொடர்ந்து நடைபெற்றதனால் நீராவியுடன் சேர்ந்த காற்றுமண்டலம் புவியைச் சுற்றி நிலை கொண்டது. இந்த நீராவியே குளிர்ச்சி அடைந்து மழை எனப் பெய்தது. ஓயாது நிகழ்ந்த இச்சம்பவங்களால் பெருமழை தொடர்ந்து பெய்து பூமியின் மேற்பரப்பில் பெருங் கடல்கள் தோன்றின.

முன்பு கடல் மட்டத்துக்கு மேல் இருந்த மலைகள் இன்று கடலுக்குள் அமிழ்ந்திருப்பதை யாம் அறியோம். எனவே கடல் வளர்கிறது என்பதை யாம் ஏற்கிறோம். ஆனாலும் பூமியின் பரப்பளவில் பெரும் மாற்றங்கள் இதுவரை நடைபெறாததால் கடல் அகலமாக வளர்வதில்லை என்பது புலனாகிறது. கடல்நீர் அதிகமாக அநேகமாக கடலின் அடித்தளத்தின் மீது எடை கூடுகிறது. அதனால் அடித்தளம் மேலும் கீழே இறங்குகிறது. வளரும் கடல் ஆழமாகி வளர்கிறது உண்மையே.

அர்ச்சுனா

## சிறுவர் வட்டம்

### உறுப்பினர்கள்

8. செல்வன் சசிவர்ணன் பரிபூரானந்தசர்மா
இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
9. செல்வி. ஜெ. ஜீவா
முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில்.
10. செல்வி தயாளினி தம்பிப்பிள்ளை
முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில்.
11. செல்வி விக்னேஸ்வரி தம்பிப்பிள்ளை
மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்.
12. செல்வி சுபாஷினி பரிபூரானந்தசர்மா
முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில்.
13. செல்வி குலேந்திரராணி வைத்திலிங்கம்
முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில்.
14. செல்வி குமுதினி வேலுப்பிள்ளை
முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில்.
15. செல்வி மதனராணி அப்பையா
முருகமூர்த்தி வித்தியாசாலை, உடுவில்.
16. செல்வன் யோகானந்தசிவம் குமரன்
திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வட்டுக்கோட்டை.

யாழ்நகரில் சகலவிதமான
பிடவைத் தேவைகளுக்கு

# சிமாட்டி

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: **24413 & 24096**

## கோழிஇறைச்சி (புறொயிலர்ஸ்)

முட்டை
மொத்த, சில்லறை விற்பனையாளர்கள்

**சிமாட்டி பாம்ஸ்**
ஸ்ரேசன் வீதி,
மயிலங்காடு,
சுன்னுகம்.

**சிமாட்டி பான்ஸி குட்ஸ்**
158, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

---

## A/L 89

கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
திறமை மிக்க ஆசிரியர்களினுல்
கல்வி கற்பிற்கப்படுகின்றன.

O/L ஆண்டு 5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம்
ஆண்டுகளுக்கான

சகல பாடங்களும் நடைபெறுகின்றன.

விபரங்கட்கு:

# NIRU TUITION CENTRE

KONDAVIL.

# சுந்தர்ஸன்

இறக்குமதி செய்யப்பட்ட நவீன மின்சார உபகரணங்கள்
உங்களது வீட்டை அலங்கரிக்க,
நவீன மின்சாரத் தூங்கு லாம்புகள்
மற்றும் சுவர் லாம்புகள்
மேலும்
மின்சார அடுப்புகள், மின்சார விசிறிகள்
அத்துடன் நவீன சுவர்க் கடிகாரங்கள்!
மகாராஜாவின் எஸ்-லோன் பைப்புகள் உபகரணங்கள்!
மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள்
(வீட்டுத் தேவைகளுக்கேற்றதும், விவசாயிகளுக்கு ஏற்றதும்)
ஆகியவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்.

# சுந்தர்ஸன்

மத்தியசந்தை -- மானிப்பாய்

குறிப்பு: வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

**LINKA ELECTRICALS:** உற்பத்தி செய்யும் 4 அடி - 2 அடி
ரியூப் லைற் செற்றுகளுக்கும், வட்ட ரியூப் லாம்புகளுக்கும்,
மின்சார அடுப்புகளுக்கும் நாமே ஏகவிநியோகஸ்தர்கள் என்பதையும்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


இச்சஞ்சிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை, 15ஆம் இலக்கத்திலுள்ள உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு மார்ச் – 1987 இல் வெளியிடப்பட்டது.

15/9/87 [illegible]
24/9/87 [illegible]
16/1/5 [illegible]

நிதித்துறையில் நாணயம் மிக்க

இன்றே! வளமான எதிர் காலத்திற்கு நாடுங்கள்

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!!

# ஷப்ரா யுனிக்கோ (f) பினான்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம் :-
207. மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

பதிவு காரியாலயம் :
61. நியூ புல்லர்ஸ் வீதி
கொழும்பு -4.
தொலைபேசி: 589310, 500576

# ஷப்ரா நிதி நிறுவனம்

வழங்கும்

## மும்முனை வட்டித் திட்டங்கள்

நிலையான முதலீட்டுத் திட்டம்
வைப்புச் சான்றிதழ் திட்டம்
முதலீட்டு சேமிப்பு திட்டம்

# SHABRA®

UNICO FINANCE LIMITED

REGISTERED OFFICE

61, NEW BULLERS ROAD, COLOMBO-4

207, POWER HOUSE ROAD, JAFFNA.